Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



அசல் 22 கரட் தங்க நகைகளையும்,
ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள

கணேசா நகையகம்

194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P. : 021 222 5987

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி– 20 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற–ஆகிர் 25 (03.06.2005) வெள்ளிக்கிழமை இதழ்:247

## திருகோணமலை நிலைமையைக் கண்டித்து

# வடக்கு - கிழக்கில் இன்று ஹர்த்தால்!

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு!

திருகோணமலை —

திருகோணமலை நகரசபை மைதானத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர்சிலையைச் சுற்றி, மேலதிகமாக் குவிக்கப்பட்ட இராணுவத்தினரை மீளப் பெறுவதாக அளித்த வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதைக் கண்டித்து, இன்று வடக்கு– கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், திருகோணமலை மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் இணைந்து இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

திருகோணமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலையை அகற்றுவது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் நே றுக் காலை 11 மணியளவில் திருகோணமலை சில்வஸ்ரார் விடுதியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய பிரதமரை சந்தித்து சந்திரிகா முக்கிய பேச்சு!

புதுடெல்கி —



இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - நேற்று மாலை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.


ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று புதுடெல்கி சென்றிருந்தார்.

இவரை, இந்திய வெளிவிவகார அலுவல்களுக்கான இராஜாங்க அமைச்சர் ஈ.அகமட், இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் வர வேற்றார்.

நேற்றுமாலை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - இலங்கையின் தற்போதைய நிலைமைகள், விடுதலைப் புலிகளுடனான பொதுக்கட்டமைப்பு உருவாக்கம், பாதுகாப்பு விவகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தத்தை தொடரவேண்டிய தார்மீகப் பொறுப்பு அரசுக்குரியதே!

### சுவிஸ் தூதரிடம் தமிழ்ச்செல்வன்





## பொதுக்கட்டமைப்பு உடன்பாடு 12 அல்லது 15 இல் கைச்சாத்து!

### ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு —

விடுதலைப்புலிகளுடன் இணைந்து எதிர்வரும் 12 அல்லது 15 ஆம் திகதி

அத்துடன், இந்த இரண்டு திகதிகளில் ஒன்றில் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடு

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு!


திருகோணமலை—

திருகோணமலை நகரசபை மைதானத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர்சிலையைச் சுற்றி, மேலதிகமாக் குவிக்கப்பட்ட இராணுவத்தினரை மீளப் பெறுவதாக அளித்த வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதைக் கண்டித்து, இன்று வடக்கு– கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், திருகோணமலை மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் இணைந்து இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

திருகோணமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலையை அகற்றுவது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் நே றுக் காலை 11 மணியளவில் திருகோணமலை சில்வஸ்ரார் விடுதியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய பிரதமரை சந்தித்து சந்திரிகா முக்கிய பேச்சு!



புதுடெல்கி—

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - நேற்று மாலை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று புதுடெல்கி சென்றிருந்தார்.


இவரை, இந்திய வெளிவிவகார அலுவல்களுக்கான இராஜாங்க அமைச்சர் ஈ.அகமட், இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் வர வேற்றார்.

நேற்றுமாலை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - இலங்கையின் தற்போதைய நிலைமைகள், விடுதலைப் புலிகளுடனான பொதுக்கட்டமைப்பு உருவாக்கம், பாதுகாப்பு விவகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தத்தை தொடரவேண்டிய தார்மீகப் பொறுப்பு அரசுக்குரியதே!

### சுவிஸ் தூதரிடம் தமிழ்ச்செல்வன்





கிளிநொச்சி—

போர்நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து பேணுவதில் இலங்கை அரசுக்குத்தான் தார்மீகப் பொறுப்பு இருப்பதாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சுவிற்சர்லாந்து தூதுவர் பெனாடினோ றகானிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுனாமி மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பு மற்றும் இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களைக் கையாள யுத்தநிறுத்த ஒப்பந்தம் நீடிப்பது அவசியம் என்று இந்தச் சந்திப்பில் சுவிஸ் தூதுவர் பெனாடினோ றகான் வலியுறுத்தினார்.

கண்டியில் உதவி வழங்கும் மாநாடு குறித்து தமிழ்ச்செல்வனிடம் விளக்கிய சுவிஸ் தூதுவர், சுனாமி மீளமைப்புக்காக பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதைத் தவிர வேறுவழி எதுவும் இல்லை என்று ஒருமித்த கருத்தை உதவி வழங்கும் நாடுகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு உடன்பாடு 12 அல்லது 15 இல் கைச்சாத்து!

### ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு—

விடுதலைப்புலிகளுடன் இணைந்து எதிர்வரும் 12 அல்லது 15 ஆம் திகதி பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பொதுக் கட்டமைப்பு எதிர்வரும் ஆறாம் திகதி ஏற்படுத்தப்படவிருந்ததாகவும், ஆனால், ஜனாதிபதி சந்திரிகா இரண்டுநாள் விஜயமாக இந்தியா செல்வதையடுத்து இது 12 ஆம் அல்லது 15 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்த இரண்டு திகதிகளில் ஒன்றில் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதே சிறந்ததென சோதிடர்கள் தெரிவித்துள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி - பொதுக்கட்டமைப்பு நிச்சயமாக ஏற்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால், அரசாங்கத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

### முத்தலிப் மீதான தாக்குதல்

## புலனாய்வுப்பிரிவின் தகுதியை கேள்விக்குரியாக்கியுள்ளது!

### ‘டெய்லி மிரர்’ பத்திரிகை சாடல்

கொழும்பு—

கொழும்பு நகர வீதியில் பட்டப் பகலில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உயரதிகாரியான லெப். கேணல் முத்தலிப் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பது - அரசின் ஒட்டுமொத்த புலனாய்வுத் துறையின் உண்மையான தகுதி நிலையைக் கேள்விக்குள்ளாக்கியிருப்பதாக ‘டெய்லிமிரர்’ ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் சாடியுள்ளது.

இது குறித்து டெய்லிமிரர் நேற்றைய ஆசிரிய தலையங்கத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது -

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபிறகு கொழும்பில் இதுபோன்ற நிகழ்வு நடைபெற்றது முதல்முறையல்ல. மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் நாம் திறமையாகச் செயற்படமுடியாது போனால் அதைப் புரிந்துகொள்ளமுடியும்.

ஆனால், தலைநகரிலேயே இப்படி நடக்கிறதே. இன்ஸ்பெக்டர் சுனில் தாப்ரூ கொல்லப்பட்ட ஒரு சம்பவத்தைத் தவிர இதர கொலைச் சம்பவங்கள் எதிலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வு உணர்வுபூர்வமாக நேற்று அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம்—

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ். நகரில் நேற்று பிரமாண்டமான முறையில் மாணவர் எழுச்சிநாள் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குகொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் மாணவர் எழுச்சிநாள் நிகழ்வு நேற்றுக் காலை 11.00 மணியளவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இருந்து ஆரம்பித்து - தமிழீழ தேசியத் தலைவரின் படத்தைத் தாங்கியவாறு பாண்ட் வாத்திய இசையுடன் பேரணியாக யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தை வந்தடைந்தனர்.

அங்கு அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின பொதுச்சுடரினை பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் பொறுப்பாளர் சுதாஸ், தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் பஞ்சலிங்கம், தமிழ் மாணவர் மன்ற ஆலோசகர் இளம்பிறையன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகளிலிருந்து



## இலங்கை வங்கியின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்—

இலங்கை வங்கி யாழ்ப்பாணம் 2 ஆம் கிளையின் நடமாடும் வங்கிச் சேவை இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நடமாடும் வங்கிச் சேவையினை இலங்கை வங்கியின் வடபிராந்தியப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் ஆரம்பித்துவைப்பார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்ட இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் 'தாயுமானவர் தத்துவம்' எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவினை ஆற்றவுள்ளார்.

✡ ✡ ✡ ✡ ✡

பருத்தித்துறை—

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தின் 10 மணி பூசை நிறைவுற்றதும் 'மண்ணிற்பிறந்தார் தம் பெருமை' என்னும் பொருள் பற்றி நவரச நாடகமணி பி.பரராசசிங்கம் சொற்பொழிவாற்றுவார். (17)

✡ ✡ ✡ ✡ ✡

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமைதோறும் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று மு.ப. 10.30 மணிக்கு 'நெஞ்சு கன கல்லு' என்னும் விடயம் பற்றி நா.நவறாஜ் (உளவளத்துணையாளர்) ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார். (17)

### வருடாந்த பொங்கல்

கோண்டாவில்—

கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் இன்று வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

முன்னதாக காலை 11 மணிக்கு அம்பாளுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றுத் தொடர்ந்து அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களைத் தீர்க்கும்முகமாக விஷேட பொங்கல் பூசைகளும் நடைபெறும். (82)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம் —

சர்வதேச கல்வியகம், பிரிட்டன் ஈபேர்ட் மன்றம், தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன நடத்தும் 'இலங்கை ஆசிரியர்களின் உரிமைகள்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினமும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரட்றிக் ஈபேர்ட் மன்றத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அடேல் பெக்கர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இதைவிட அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற 50 ஆசிரியர்கள், பங்குதாரர்களும், வள ஆளணியினராக யாழ். கல்விப் பணிப்பாளர் தி.செல்வரட்ணம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம், துணைச் செயலாளர் பஞ்சலிங்கம், யாழ். இந்துமகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச. ஜெயராசா மற்றும் வேலணை வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலய அதிபர் பெ. அருணகிரிநாதன், பெரியபுல மகாவித்தியாலய அதிபர் க.கணலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### சேவைநலன் பாராட்டு விழா

நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் அதிபர்களாக கடமையாற்றி அண்மையில் ஒய்வு பெற்றவர்களான செல்வி பா. மார்க்கண்டு, செல்வி ஜே.எஸ். வஸ்தியாம்பிள்ளை, க.ஜெயானந்தம் ஆகிய மூவருக்குமான சேவைநலன் பாராட்டுவிழா நாளை முற்பகல் 10.30 மணிக்கு ஆனைப்பந்தி மெதடிஸ்தமிஷன் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் எஸ்.சோமேஸ்வரபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், யாழ். வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் என்.வரதராசா, நல்லூர் கோட்ட கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.காங்கேயன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

## காணாமற்போனவர்கள்: இறந்தோராக கருதப்பட்டு பதிவு செய்ய சட்டம் அமுல்

யாழ்ப்பாணம்—

காணாமற் போனவர்கள் இறந்தோராக கருதப்பட்டு அவர்களின் இறப்பை பதிவுசெய்து கொள்வதற்காக தற்காலிக ஏற்பாடு நாடாளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண பதிவாளர் நாயகம் சதாசிவஐயர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டம் எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கும். இது தொடர்பான சுற்றறிக்கை விரைவில் பதிவாளர் நாயகத்தால் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களால் காணாமல் போவோரின் இறப்புகளை காலக்கெடு இன்றி பதிவு செய்யவும் இந்தச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

## ஆசிரியர் சங்க கிளைக் கூட்டம்

யாழ்ப்பாணம்—

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட கிளைக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் ஆசிரியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிளைகளதும் உறுப்பினர்களையும், தாய்ச்சங்க நிர்வாகிகள் மற்றும் வலய மாவட்ட அமைப்புகளின் தலைவர், செயலாளர் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட செயலாளர் க.குமாரசாமி தெரிவித்துள்ளார்.

## நூல் அறிமுகவிழா

கவிஞர் எமிலியான் ஜோய் எழுதிய அந்தக் கரையில் என்னும் நூலின் அறிமுகவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு குருநகர் மவுண்கார்மேல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அ.யேசுராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் எஸ்.எ.அழகராஜா, கு.இராயப்பு வி.ஜே.கொன்ஸ்ரன்ரைன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் பிரான்சில் வெளியிட்டுவைத்துள்ள மேற்படி நூலில் அறிமுக விழாவை குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக்கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

## பொருட்கள் அழிப்பு

யாழ். மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜீவநாதனின் தலைமையில் அரியாலை மற்றும் நாவாந்துறைப் பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனையின்போது காலங்கடந்த மற்றும் மனித பாவனைக்குதவாத பிஸ்கட், கன்டோஸ், ஹோர்லிக்ஸ், சமபோஷ, றொட்டி, இறைச்சிக் குழம்பு, பூந்தி, சட்டவிரோத மாட்டிறைச்சி ஆகியவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.


## சிறு விளம்பரம்

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். **T.P - 0779122836** நேரம்: காலை 9.00 - 8.30 வரை

(1176)

**கிரிக்கெட் சுற்றுப்போட்டி 2005**

வடமராட்சி மென்பந்து துடுப்பாட்ட சங்கம் நடாத்தும் வடமராட்சி பாடசாலைகளுக்கிடையிலான தோற்பந்து கிரிக்கெட் போட்டி

(15 வயது பிரிவு 30 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்)

இடம் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானம்

❖ போட்டி இல 01 - 2005.06.03 காலை 9.00மணி
விக்னேஸ்வரா கல்லூரி எதிர் உடுப்பிட்டி அ.மி கல்லூரி
❖ போட்டி இல 02 - 2005.06.03 பி.ப 2.30 மணி
நெல்லியடி ம.ம.வி எதிர் ஹாட்லிக் கல்லூரி
❖ போட்டி இல 03 - 2005.06.04 காலை 9.00மணி
போட்டி இல 01 இல் வெற்றி எதிர் போட்டி இல 02 இல் தோல்வி
❖ போட்டி இல 04 - 2005.06.04 பி.ப 2.30 மணி
போட்டி இல 02 இல் வெற்றி எதிர் போட்டி இல 01 இல் தோல்வி
❖ இறுதியாட்டம் 2005.06.05 காலை 9.00 மணி
போட்டி 03 இல் வெற்றி எதிர் போட்டி இல 04 இல் வெற்றி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். போட்டிக்குழு

(சி-4183)

போட்டி அனுசரணை: உள்நாட்டு, வெளிநாட்டு உணவு வகைகளை சுடச்சுட வழங்கும் ஸ்ரார் உணவு விடுதி STAR RESTURANT கொடிகாமம் வீதி நெல்லியடி

**மனோகரா** யாழ்ப்பாணம்

தித்திக்குதே புகழ் ஜீவா, கஜாலா, ரகுமான் மற்றும் பலர் நடித்த

**ராம்**

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்




கடைசி வாரமாக

காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00, 7.00,

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல்

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த

**பிரியமான தோழி**



பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

**நாகூன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

இலங்கையிலும்இந்தியாவிலும்ஒரேதின வெளியீடாக உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

**அறிந்தும் அறியாமலும்**

காட்சிகள் 10.30, 2.30, 6.30, 9.30

**ராஜா** யாழ்ப்பாணம்

லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி லக்ஷ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த

**சூர்யா**



ஆக்ஷன் படம்

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தடைசெய்யப்பட்ட அமைப்பல்ல!

## அமெரிக்கத் தூதரகம் விளக்கம்

கொழும்பு

ஐக்கிய நாடுகள் சபையின் விசேடப் பிரதிநிதியாக இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி கிளிண்டனை, தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி சந்தித்தது தொடர்பான சர்ச்சைகளுக்கு அமெரிக்கத் தூதரகம் விளக்கமளித்துள்ளது.

கடந்த திங்களன்று இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் பிலிப் ஏப்ரெய்ன்,

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் மைக்கல் பெர்மியோ, அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீ ட்டைத் தொடர்புகொண்டு, தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதி றெஜி கிளிண்டனைச் சந்திப்பது குறித்துத் தெரியப்படுத்தியபோது,

இந்தச் சந்திப்புக் குறித்து தங்களுக்கு எந்தச் சிக்கலும் இல்லை என்று அமெரிக்கத் தூதுவர் கூறினார்.

கிளின்டன் அமெரிக்காவின் பிரதிநிதி அல்ல. அவர் ஐ.நாவின் பிரதிநிதியாகவே இங்கு வருகை தந்தார். இந்தப் பயணத்துக்கு நாங்கள் எதுவும் செய்ய இயலாது. அரச சார்பற்ற அமைப்புக்களுடனான சந்திப்புக் குறித்து அமெரிக்கத் தூதரகம் எவ்வித யோசனைகளையும் அளிக்கவில்லை.

பாதுகாப்பு மற்றும் ஊடகவியலாளர் மாநாடு குறித்தே ஐ.நா. பிரதிநிதிகளிடம் நாங்கள் பேசினோம். கிளின்டன் யார் யாருடன் சந்திப்பு மேற்கொள்



கிறார் என்பதை எல்லாம் ஐ.நா. அமைப்பினரே தீர்மானித்தனர்.

கிளின்டன் ஒரு தனிநபராக ஐ.நாவுக்காகக் கடமையாற்றுகிறார். அவர் யாரை வேண்டுமானாலும் சந்திக்கலாம். அவர் அமெரிக்காவின் பிரதிநிதியாக இங்கு வரவில்லை. அத்துடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட அமைப்பல்ல. இருந்தபோதும் கிளின்டன் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான சந்திப்பில் பாதுகாப்புக் குறைபாடுகள் இருந்தன. இதை ஐ.நாவும் ஒத்துக் கொண்டிருக்கிறது எனவும் கூறினார்.

## முத்தலிப் கொலை விசாரணைக்கு விசேட பொலிஸ் குழுக்கள் அமைப்பு

கொழும்பு

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உயரதிகாரி முத்தலிப் கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்த சிறப்புப் பொலிஸ் விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்களில் மொத்தம் 150 பொலிஸார் இடம் பெற்றுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கூறினார். இந்தக் கொலை வழக்கில் உண்மையான குற்றவாளிகளை விரைவில் கண்டறிவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே முத்தலிப்பின் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்தவர் ஹடன் விஜேரட்ன கூறுகையில் =

முத்தலிப்பின் தலையின் உள்பகுதியில் 7 இடங்களிலும் வெளியில் 4 இடங்களிலும் குண்டுகள் பாய்ந்ததாலுமே உயிரிழந்ததாகத் தெரிவித்தார்.

## எஸ்.பிக்கு மாற்று யார்? குழப்பத்தில் ஐ.தே.கட்சி!

கொழும்பு

சிறையில் அடைக்கப்பட்டதால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கும் எஸ்.பி. திஸநாயக்கவுக்கு மாற் றாக யாரை நியமிப்பது என்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியில் குழப்பம் நீடிக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் லக்ஸ்மன் கிரியெல்லவை நுவரெலியா மாவட்டத் தலைவராக நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்நிலைக்குழு முடிவு செய்திருக்கிறது. ஆனால் இவரது நியமனத்தை எதிர்க்கும் கட்சியின் ஒரு பிரிவினர் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதியான ரேணுகா ஹேரத்தை நியமிக்கக் கோருகின்றனர்.

மற்றொரு பிரிவினரோ சிறையிலுள்ள எஸ்.பி.திசநாயக்கவின் துணைவியார் தாமர திசநாயக்கவுக்கே - வெற்றிடமாகும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அளிக்கவேண்டுமென வலியுறுத்தி வரு கின்றனர்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் இறுதி முடிவெடுக்க முடியாமல் குழப்பத்தில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் அமைச்சரவை பத்திரத்தைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை!





கொழும்பு

10 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர மாக்குவதற்குத் தடையாகவுள்ள கஷ்ட, அதிகஷ்ட பிரதேச பாடசாலை என்ற வேறுபாடுகளை நீக்கி, வடக்கு - கிழக்கு மாகாணம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற ரீதியில் இந்தத் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கும்படி அமைச்சர் பேரியல் அஷ்ரப் கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டிமெல்லிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பிரச்சினை தொடர்பான மாநாடு இசுருபாயாவிலுள்ள கல்வி அமைச்சில் அமைச் சர் பேரியல் அஷ்ரப் தலைமையில் நடைபெற்றது. இதன்போது இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 35 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளை மீள்நிர்மாணம் செய்வது தொடர்பாகவும் இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது.

அத்தோடு, தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான கல்வித் தகைமையாக க.பொ.த. உயர்தரம் அடிப்படையாகக் கொள்ளப்படவேண்டும் எனவும் அமைச்சர் பேரியல் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ, கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல், வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எம்.தியாகலிங்கம் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசகர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து பல்வேறு விடயங்கள் குறித்து அமைச்சர் பேரியல் அஷ்ரப், ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளும் ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளும் காணப்பட்டன. அம்பாறையில் கடந்த வருடம் வழங்கப்பட்ட சிங்கள மொழி மூல தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான விசாரணை அறிக்கை குறித்த இறுதி முடிவு எதிர்வரும் 9 ஆம் திகதி எடுக்கப்படும் என ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.


வடக்கு - கிழக்கில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் 873 ஆங்கில ஆசிரியர்களை உடனடியாக நிரந்தர சேவைக்குள் உள்வாங்க வேண்டும். அதன் பின்னரே அவர்களுக்கு பயிற்சிநெறிகளை வழங்கும்படி அமைச்சர் பேரியல் அஷ் ரப் கேட்டுக்கொண்டார்.

பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர் நியமனத்திற்காக பொதுச்சேவை ஆணைக் குழுவின் அனுமதி கிடைத்ததும் உரிய நிய மனங்களை வழங்குவதாகவும் இலங்கை ஆசிரியர் சேவை பதவியுயர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் தெரிவித்தார்.

## இராணுவம் - புலிகள் நிழல்யுத்தம் தொடர்பாக கண்காணிப்புக்குழு கவனம் செலுத்தவேண்டும்

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

கொழும்பு



இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினருக்கு இடையில் இடம்பெற்றுவரும் நிழல்யுத்தம் தொடர்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கவனம் செலுத்தவேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் - இரண்டு தரப்புக்கும் இடையில் போர்நிறுத்தம் நடைமுறையில் இருக்கின்றபோதும், இரண்டு தரப்பின் புலனாய்வுப் பிரிவினருக்கும் இடையில் இடம்பெற்று வருகின்ற நிழல்யுத்தம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும், நோர்வே ஏற்பாட்டாளர்களும் கவனம் செலுத்தவேண்டும்.

இதேவேளை சமாதான முன்னெடுப்புக்களில் முஸ்லிம்களையும் மூன்றாம் தரப்பாக ஏற்றுக்கொள்வது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## அடுத்த வாரமளவில் அமைச்சரவையில் மாற்றம்!

கொழும்பு

அமைச்சரவையைத் திருத்தியமைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளாரென ஜனாதிபதி செயலகத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த அமைச்சரவை மாற்றம் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் இடம் பெறலாம் என்று கூறப்படுகிறது. போக்குவரத்து, சமுர்த்தி, உல்லாசப்பயணம், கைத்தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் உள்ளூராட்சி அபிவிருத்தி அமைச்சின் பதவிகளில் மாற்றம் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சுற்றுலா, கைத்தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பைசர் முஸ்தபாவை நியமிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் எதிர்வரும் 10 ஆம் திகதி பிரதி அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாற்றம் குறித்து ஜனாதிபதி தனது ஆலோசகர்களுடன் கலந்தாலோசனை செய்வதாகத் தெரியவருகின்றது.

அமைச்சரவைத் திருத்தத்துக்கு முன்னர் சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று அதிகார சபையுடனும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழுவுடனும் எதிர்வரும் வாரங்களில் விசேட கலந்துரையாடல்களை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக பாதுகாப்புச்சபை கூடி ஆராய்ந்தது!

கொழும்பு



பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை கூடிய தேசிய பாதுகாப்புச் சபை பல்வேறு நடவடிக்கைகளை குறித்தும் விரிவாக ஆராய்ந்தது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், மூத்த புலனாய்வு அதிகாரிகள், முக்கிய அமைச்சர்கள் மற்றும் மூத்த படைத் தளபதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கொழும்பு - நாரஹேன்பிட்டி - பொல்ஹென்கொட பகுதியில் சிரேஷ்ட புலனாய்வுத்துறை அதிகாரியான மேஜர் முத்தலிப் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அவசர பணிப்புரைக்கமையவே தேசிய பாதுகாப்புச் சபையின் விசேட கூட்டம் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் அனைத்துச் சக்திகளையும் முறியடிப்பதற்கு புதிய பாதுகாப்பு வியூகங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்ட நான்கு முக்கிய தீர்மானங்கள் உட்பட பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு எடுக்கப்பட்ட முடிவுகளை மிக இரகசியமாக வைத்திருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், கொழும்பு மாவட்டத்தின் பாதுகாப்பை முதலில் உறுதிப்படுத்தவும் அதற்குத் தேவையான பாதுகாப்புத் தந்திரோபாயங்களைக் கையாள்வது தொடர்பாகவும் நீண்டநேரம் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

தேசிய பாதுகாப்புச்சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றிய அனைத்து விபரங்களும் நேற்று முன்தினம் பிற்பகல் மூன்று மணியளவில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரால் ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் இவை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன.

இதேவேளை, ஜனாதிபதியின் விசேட உத்தரவுக்கமைய செவ்வாய்க்கிழமை முதல் முப்படைத் தளபதிகளும் பொலிஸ் மா அதிபரும் கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

# அணியில் வேகப்பந்து வீச்சாளருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்!

## ஸ்ரீநாத் சொல்கிறார்



மும்பை —

இந்திய அணியில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று ஸ்ரீநாத் வலியுறுத்தியுள்ளார்.

மும்பை ஜிம்கானா கிளப்பில் விளையாட்டு குறித்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீநாத், பிலியர்ட்ஸ் சம்பியன் கீத்தேசத்தி, துப்பாக்கி சுடும் வீராங்கனை அஞ்சலி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

பின்னர் நடைபெற்ற பேட்டியின்போது ஸ்ரீநாத் நிருபர்களிடம் கூறியதாவது -

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களை கையாளுகின்ற முறை மாற்றப்படவேண்டும். அணியில் 6 முதல் 7 வேகப்பந்து வீச்சாளர்களை சேர்த்து அவர்களை மாற்றி, மாற்றி பயன்படுத்தவேண்டும். குறிப்பாக வெளிநாட்டுக்கு சுற்றுப்பணம் செல்லும்போது இதை அவசியம் பின்பற்றியாக வேண்டும்.

ஒவ்வொரு சுற்றுப்பயணத்துக்கும் மிதவேகப் பந்துவீச்சாளர்களை மாற்றி, மாற்றி தெரிவு செய்யும்போது வீரர்கள் மீது பொறுப்பு திணிக்கப்படுகிறது. இதனால் வேகப்பந்து வீச்சின் தரம் பாதிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட குழுவாக வேகப் பந்து வீச்சாளர்களை எடுத்து அவர்களை தெரிவு செய்து தொடர்ந்து பயன்படுத்தினால், அவர்களும் நன்கு ஒருங்கிணைந்து செயற்படமுடியும். நல்ல பலனும் கிடைக்கும். இப்படி மிதவேகப் பந்துவீச்சாளர்களை தயார் செய்யவேண்டியது மிகமிக அவசியமானதாகும். இந்திய அணியின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இதைத் தெரிவுக் குழுவினர் பரிசீலித்தே தீரவேண்டுமெனத் தெரிவித்தார்.

# தூஸ்ரா சர்ச்சை இனிமேல் எழாது!

## ஹர்பஜன்சிங் தெரிவிப்பு



லண்டன் —

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சில் சந்தேகம் ஏற்பட்டு போட்டி நடுவர்கள் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் புகார் செய்தனர். இந்தப் புகாரிலிருந்து ஹர்பஜன் சிங் கடந்த வாரம் விடுபட்டார்.

ஹர்பஜன் சிங் இங்கிலாந்தில் உள்ள கர்ரே கவுண்டி கிளப்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அவர் அளித்த ஒரு பேட்டியில் -

எனது பந்து வீச்சு சர்ச்சை முடிவுக்கு வந்தவிதம் மகிழ்ச்சியளிக்கிறது. எனது பந்துவீச்சில் எந்தவித குறையும் இல்லை. இனிமேல் இந்தப் பிரச்சினை எழாது என்று நம்புகிறேன். இந்த விடயத்தில் எனக்கு முழு ஆதரவு அளித்த இந்திய கிரிக்கெட் சபைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

# விளையாட்டு

# மாவட்ட மட்ட பாடசாலைகளின் உடற்பயிற்சி போட்டி முடிவுகள்!

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளிடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

கடந்த வாரம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற மாவட்டமட்ட போட்டியில் தீவகம், யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் கல்வி வலயங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையே ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு என்ற வகையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

இந்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் - முதலாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், இரண்டாமிடத்தை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும், மூன்றாமிடத்தை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயமும்,

பெண்கள் பிரிவில் - முதலாமிடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரியும், இரண்டாமிடத்தை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியும், மூன்றாமிடத்தை ஊர்காவற்றுறை சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன. (58)

# காட்சி உதைபந்தாட்ட போட்டி: மரடோனா பங்குபற்றுகிறார்!



குரோஷியா —

குரோஷியாவில் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறும் நல நிதி காற்பந்தாட்டப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவின் உதைபந்தாட்ட வீரர் டிகோ மரடோனா விளையாடவுள்ளார்.

குரோஷியாவில் உள்ள வடக்கு கடற்கரை நகரான நோவி விநோடோல்ஸ்கியில் உள்ள ஆதரவற்ற நிறுவனம் ஒன்றுக்கு நிதி திரட்டுவதற்காக இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

மீண்டும் குரோஷியா செல்வதில் பெருமையடைகிறேன் என மரடோனா தெரிவித்துள்ளதாக குரோஷிய பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குரோஷியாவைச் சேர்ந்த முன்னாள் நட்சத்திர வீரர்களான டவோர் சுகெர், வோனிமிர் போபன் உள்ளிட்டோரும் அந்தப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

மரடோனாவும், மெக்கன்ரோவும் விளையாடும் விதமான ரெனிஸ் போட்டிக்கும் அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்துள்ளதாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

போதைமருந்து உட்கொண்டதால் உடல் பருமனடைந்த மரடோனா, கடந்த மார்ச் மாதம் நிறையைக் குறைக்க சத்திர சிகிச்சை மேற்கொண்டார். இதையடுத்து அவரது நிறை 50 கிலோ குறைந்தது. அதற்கு முன்பு 121 கிலோவாக அவர் இருந்தார்.

# இங்கிலாந்து தொடருக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிப்பு!

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி அடுத்தமாதம் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. இதற்கான வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அதன் விபரம் வருமாறு -

டெஸ்ட் அணி - பொண்டிங் (கப்டன்), கில்கிறிஸ்ட், கிளார்க், ஹைடன், லாங்கர், கடிச், மார்ட்டின், ஜிலெஸ்பி, கஸ்பரோவிச், மக்ரா, வோன், ஹடின், பிரெட்லீ, மெக்கில்.

ஒருநாள் அணி - பொண்டிங் (கப்டன்), கில்கிறிஸ்ட், சைமன்ஸ், ஹைடன், கிளார்க், ஹடின், மார்ட்டின், வட்சன், பிராட் ஹாட்ஜ், மக்ரா, ஜிலெஸ்பி, கஸ்பரோவிச், கடிச்.

# பங்களாதேஷுடனான 2ஆவது டெஸ்ட்: இங்கிலாந்து அணி அறிவிப்பு!

லண்டன் —

இங்கிலாந்து சென்றுள்ள பங்களாதேஷ் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பமாகிறது. இதற்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டது.


புதுமுக வீரராக ஜோனாதன் லீவிஸ் அணியில் இடம்பெற்றுள்ளார். இதற்கு பின்பு மூன்றாவது அணியாக அவுஸ்ரேலியா பங்கேற்க முத்தரப்பு ஒருநாள் தொடர் மற்றும் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக மூன்று ஒருநாள் போட்டிகளிலும் இங்கிலாந்து அணி விளையாடவுள்ளது. இவ்விரு தொடருக்குமான இங்கிலாந்து அணி வருமாறு :

டெஸ்ட் அணி -

மைக்கல் வோகன் (கப்டன்), ட்ரெஸ்கொதிக், ஸ்ரரஸ், இயன் பெல், கிரஹாம் தோர்ப், பிளின்ரொப், ஜெரைன்ட் ஜோன்ஸ், கரீத் பேட்டி, ஹொகாட், ஹர்மிசன், சைமன் ஜோன்ஸ் மற்றும் லீவிஸ்.

முத்தரப்பு ஒருநாள் தொடர் அணி - மைக்கல் வோகன் (கப்டன்), கபீர் அலி, போல் கொலிங்வூட், பிளின்ரொப், ஆஸ்லே கைல்ஸ், டரன் ஹேோ, ஹர்மிசன், ஜெரைன்ட் ஜோன்ஸ், சைமன் ஜோன்ஸ், லீவிஸ், கெவின் பீட்டர்சன், விக்ரம் சோலங்கி, ஸ்ரரஸ் மற்றும் ட்ரெஸ்கொதிக்.

# பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியின் அரையிறுதியில் மரியானோ புயர்டா!




பாரிஸ் —

பிரெஞ் ஓபன் ரெனிஸ் தொடரில் மரியானோ புயர்டா அரையிறுதிக்கு முன்னேறினார். இரட்டையர் ஆட்டத்தில் பயஸ் ஜோடி தோல்வியடைந்தது.

பாரிஸில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துபெற்ற பிரெஞ் ஓபன் தொடர் நடைபெறுகிறது. ஆண்கள் ஒற்றையர் காலிறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடந்தது. ஒன்பதாம் நிலை வீரரான ஆஜென்ரீனாவின் கில்லர்மோ கேனஸ், சகநாட்டவரான புயர்டாவை எதிர்த்து விளையாடினார். இரு வீரர்களும் மாறி மாறி செட்களைக் கைப்பற்ற கடும் போட்டி காணப்பட்டது. கேனஸ் முதல் செட்டை இழந்தாலும், சுதாரித்து ஆடி அடுத்த இரண்டு செட்களைக் கைப்பற்றினார். நான்காவது செட்டை புயர்டா கைப்பற்ற ஆட்டத்தில் விறுவிறுப்பு கூடியது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி செட்டில் கேனஸ் 4-6 என்ற கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

இறுதியில் புயர்டா 6-2, 3-6, 1-6, 6-3, 6-4 என்ற செட்களில் போராடி வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் இரட்டையர் காலிறுதிப் போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், சேர்பியாவின் நீனட் ஜிமோன்ஜிக் ஜோடி, அமெரிக்காவின் பொப் பிரையன், மைக் பிரையன் ஜோடியை எதிர்த்து விளையாடியது. இதில் பயஸ் ஜோடி 6-7, 3-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்தது.


பெண்கள் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் பத்தாம் நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின், ரஷ்யாவின் நாதியா பெட்ரோவாவை எதிர்த்து விளையாடவுள்ளார். சிறப்பான நிலையிலுள்ள ஹெனின் எளிதில் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.



மற்றொரு போட்டியில் பிரான்ஸின் மேரி பியர்ஸ், ரஷ்யாவின் எலீனா லிகோவட்செவாவைச் சந்திக்கிறார். சொந்த மண்ணில் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பைப் பெற்றுள்ளார் பியர்ஸ். கடந்த 2000 இல் சம்பியன் பட்டம் வென்றுள்ள இவருக்கு லிகோவட்செவா கடும் போட்டியாக இருப்பார்.

# சப்பலின் வழிகாட்டுதலில் இந்திய அணி முன்னேறும்

## ஷேவாக் சொல்கிறார்



மும்பை —

பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள கிரேக் சப்பலின் வழிகாட்டுதலில், இந்திய அணி சிறப்பான முன்னேற்றத்தை அடையுமென ஷேவாக் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- பயிற்சியாளரின் ஆலோசனைகளை நான் எடுத்துக் கொள்வேன். அது சரியென்றால் அதன்படி ஆடுவேன், இல்லையென்றால் நான் எதனைச் சரியென்று நினைக்கிறேனோ அதன்படி தொடர்ந்து ஆடுவேன். விக்கெட்டை விரைவில் பறிகொடுக்காமல் நீண்டநேரம் நிலைத்து நின்று ஆடுவது குறித்து கவனம் செலுத்துவேன். முழு உடல் தகுதியுடன் உள்ளேன். எதிர்வரும் சீசனை எதிர்நோக்கி இருக்கிறேன். புதிய பயிற்சியாளர் கிரேக் சப்பலின் பயிற்சியில் இந்திய அணி சிறந்த நிலைக்கு முன்னேறும் என்று நம்புகிறேனெனத் தெரிவித்தார்.

# புனரமைக்கப்பட்ட வீதி வளைவு நேற்றுமுன்தினம் மீளத்திறப்பு!



செம்மணிச் சந்திக்கு அண்மையாகவுள்ள 'யாழ்ப்பாணம் வரவேற்கின்றது' என்ற வீதி வளைவு புனரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ்.மாநகரசபை ஆணையாளரால் திறந்துவைக்கப்பட்டது.

செம்மணிச் சந்திக்கு அண்மையாகவுள்ள 'யாழ்ப்பாணம் வரவேற்கின்றது' என்று எழுதப்பட்ட வளைவு கடந்தகால யுத்த நடவடிக்கைகளின்போது உடைந்து வாசகங்கள் அற்ற நிலையில் வெறும் வீதி வளைவாகவே காணப்பட்டது. இந்த வளைவு தற்போது புனரமைக்கப்பட்டு 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' என்ற வாசகம் மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டு வர்ணப்பூச்சுக்கள் பூசப்பட்டு தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வளைவு நேற்றுமுன்தினம் காலை மாநகரசபை ஆணையாளரால் திறந்துவைக்கப்பட்டது.

# காலாவதியான பொருட்கள் விற்பனைசெய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை!

## மாகாண பிரதிப் பணிப்பாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்

வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்களை விற்பனைசெய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனை தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களால் உணவகங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனைகளின்போது விற்பனைத்திகதி காலாவதியான உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தப் பொருட்கள் யாவும் கைப்பற்றப்பட்டு அந்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

விற்பனை திகதி காலாவதியான் உணவுப் பொருட்களால் உடல் நலத்துக்கு தீங்கு விளைவிக்கும். எனவே, பொதுமக்கள் பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை வாங்கும்போது விற்பனை காலாவதியான திகதியை அவதானமாகப் பார்த்து வாங்கவேண்டும்.

விற்பனைத் திகதி காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனைசெய்யும் உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் பற்றிய விபரங்களை உடனடியாக உங்கள் உங்கள் பகுதி சுகாதார வைத்திய அதகாரிக்கு அல்லது பொது சுகாதார பரிசோதகருக்கு தெரியப்படுத்தினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகச் சுகாதாரத் திணைக்களத்தால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, விற்பனைத் திகதி காலாவதியான உணவுப் பொருட்களின் விற்பனையைக் கட்டுப்படுத்த பொதுமக்களை ஒத்துழைப்பு வழங்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

# ஆலயத்தில் நடைபெறும் மஹோற்சவத்தால் அந்தக் கிராமமே புனிதமாக்கப்படுகிறது!

## சிவஸ்ரீ பாலமுரளிதரக் குருக்கள்

மட்டுவில்

ஆலயங்களில் நடைபெறுகின்ற நித்திய பூசைகளில் இடம்பெறுகின்ற குறைபாடுகளையும், தவறுகளையும் நிவர்த்தி செய்வதற்காகவே மஹோற்சவம் நடத்தப்படுகிறது.

ஒரு ஆலயத்தில் மஹோற்சவம் நிகழும்போது அந்த ஆலயச் சூழலில் உள்ள மக்கள் புனிதமடைகிறார்கள். அந்த ஊர் புனிதமடைகிறது. மஹோற்சவ காலங்களில் ஆசார சீலர்களாக விரதமிருந்து, புலாலுண்ணல், மது அருந்துதல் என்பவற்றைத் தவிர்த்து மக்கள் தங்களைத் தாங்களே புனிதர்களாக்கிக் கொள்கின்றனர்.

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க நாமெல்லோரும் புலாலுண்ணலைத் தவிர்த்தல்வேண்டும்.

இவ்வாறு மட்டுவில் வடக்கு அருள்மிகு மகாமுத்துமாரியம்மன் மஹோற்சவத்தின் இறுதிநாளான தீர்த்தோற்சவத்தன்று மஹோற்சவக் குரு சிவஸ்ரீ பாலமுரளிதரக் குருக்கள் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

நாம் மிருகங்களையும், சகல ஜீவராசிகளையும் மதித்தல் வேண்டும். முதலில் மனிதனை மனிதனாக மதித்து நடக்கப்பழக வேண்டும். இதற்காகவே ஆலயங்களில் எல்லாம் எருது, எலி, சிங்கம், யானை, மயில், குதிரை, காராம் பசு போன்ற விலங்குகள் வாகனங்களாக உபயோகிக்கப்படுகின்றன என்றார்.

தினமும் ஆலயத்துக்குச் சென்று வழிபட முடியாதவர்கள், மஹோற்சவ காலத்திலாவது ஆலயத்துக்குச் சென்று வழிபட்டு இறையருளுக்குப் பாத்திரமாகவேண்டும் எனத் தெரிவித்தார். (24)

# நயினாதீவு உற்சவம் 8 ஆம் திகதி ஆரம்பம்

நயினாதீவு

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகின்றது.

8 ஆம் திகதி பகல் 12 மணிக்கு கொடியேற்றமும், 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருமஞ்சமும், 18 ஆம் திகதி கருட சர்ப்ப விசேட பூஜையும், வாயுபட்சனி நாக வீதியுலாவும், 20 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறமும், 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் புதன்கிழமை தீர்த்த உற்சவமும், 23 ஆம் திகதி வியாழக்கிழமை தெப்பத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

வழமைபோல இம்முறையும் யாத்திரீகர்களின் நலன்கருதி படகுச் சேவை, அமுதசுரபி மடத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குதல், தாகசாந்தி நிலையத்தினர் தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், தொண்டர்கள், சாரணர்கள், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படை ஆகியோரின் ஒத்துழைப்பும் பெறப்படவுள்ளது. (101)

# பாடசாலைகளில் சுகாதார கழகங்களை இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கவும்!

## சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் கோரிக்கை

சுதுமலை

பாடசாலைகளில் இயங்கும் சுகாதாரக் கழகங்களை மீளமைத்து அதனைத் திறம்பட செயற்படவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வேண்டுகோள் விடுக்கும்படி, மானிப்பாய் பொது சுகாதாரப் பரிசோதகர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சில பகுதிகளில் காணப்படும் சுகாதாரச் சீர்கேடுகள் காரணமாக டெங்கு, மலேரியா போன்ற பல விதமான தொற்றுநோய்கள் பரவிவருகின்றன. இதனைத் தடுப்பதாயின் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இதற்கு மாணவர்களின் பங்கு மிகமுக்கியமானது.

மேலும் பிரதேச செயலரிடம் எமது பகுதி பாடசாலைகளில் சுகாதாரக் கழகங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு சில பாடசாலைகளில் இயங்கிவருகின்றன. சில பாடசாலைகளில் அவை செயற்படாதுள்ளன.

இப்படியான இந்தச் சுகாதாரக் கழகங்களைச் சிறப்பாக இயங்கவைத்து, இந்தக் கழகங்களிலுள்ளவர்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் இந்தத் தொற்றுநோய்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கமுடியும்.

எனவே தயவுசெய்து தாங்கள் உடனடியாக எமது பகுதி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு இதனைத் தெரியப்படுத்தி பாடசாலைகளில். உள்ள சுகாதாரக் கழகங்களை இயங்கவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். (44)

# புகைத்தல் எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு கொடி விற்பனை!

சுதுமலை

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அதிகார சபையால் மக்கள் மத்தியில் கொடிகள் விற்கப்பட்டுவருகின்றன.

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு வாரமாகிய மே 31 ஆம் திகதி முதல், ஜூன் 06 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் சமுர்த்தி அதிகார சபையின் பணிக்குழுவாகிய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் கொடிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தக் கொடிகள் விற்பனை மூலம் கிடைக்கும் நிதிமூலம் பிரதேச செயலர் பிரிவுகளில் மிகவும் வறிய மக்கள், வலது குறைந்தவர்கள் ஆகியோருக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்து வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (44)

# மாதிரி மருந்தகம் அமைப்பதற்கு இளவாலையில் அரச காணி இருப்பின் தெரியப்படுத்துமாறு கோரிக்கை!

சுதுமலை

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளவாலைப் பகுதியில் அமைக்கப்படவுள்ள மத்திய மருந்தகத்துக்கு பொருத்தமான அரசகாணி இருப்பின், அதை உடனடியாகத் தெரியப்படுத்துமாறு மானிப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் கேட்டுள்ளார்.

இளவாலையில் மத்திய மருந்தகம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும், இதனால் அந்தப் பகுதி மட்டுமன்றி, அயல் பகுதிகளைச் சேர்ந்த மக்களும் பயனடையக்கூடும். மருந்தகம் அமைப்பதற்கு இதுவரை இடம் எதுவும் தெரிவுசெய்யப்படாததால், அரச காணிகள் எதுவும் அந்தப் பகுதியில் இருப்பின் தம்முடன் உடனடியாகத் தொடர்புகொண்டு இந்த மருந்தகம் அமைக்க ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். (44)

# விடுதியைச் சூழ கழிவுகள் கொட்டப்படுவதால் சிரமம்!

யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழக ஆனந்த குமாரசுவாமி பெண்கள் விடுதிக்கு அண்மையாகக் கொட்டப்படும் குப்பைகளை விரைவாக அகற்றுவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாக - நல்லூர் பிரதேச சபைச்செயலாளர் பொ. வைரமுத்து தெரிவித்தார்.

பல்கலைக்கழக ஆனந்த குமாரசுவாமி பெண்கள் விடுதிக்கு அருகாமையில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களும், இராணுவத்தினரும் தொடர்ச்சியாகக் கழிவுப்பொருட்களைக் கொட்டுகின்றனர்.

இதனால் அந்த வீதியால் போக்குவரத்து செய்யமுடியாதுள்ளது. அத்துடன் விடுதியில் வசிக்கும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என யாழ்.பல்கலைக்கழக விடுதியில் தங்கும் மாணவர்களுக்கான ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பிரதேச சபை செயலரிடம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

நல்லூர் பிரதேச சபைக்குள் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. இந்தப் பகுதிக்குள்ளேயே பல்கலைக்கழக ஆனந்தகுமாரசுவாமி பெண்கள் விடுதி உள்ளதால், மாணவர்களதும், பொது மக்களதும் நலன்களைக் கருத்திற்கொண்டு செயற்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாநகர சபை ஆணையாளரிடம் கேட்டபோது - தமது மாநகர சபை எல்லைக்குள் மேற்படி ஆனந்தகுமார சுவாமி பெண்கள் விடுதி இல்லையெனவும் - அது நல்லூர் பிரதேசசபைக்குட்பட்டதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


# ஆலயத்தில் சிற்ப வேலைகள்

பிரசித்தி பெற்ற பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் இராஜகோபுரம் கட்டும் பணிகள் முடிவுற்று தற்போது சிற்பங்கள் அமைக்கும் பணி துரித கதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இலங்கையிலேயே மிகவுயர்ந்த கோபுரங்களில் ஒன்றான இந்த ஆலயத்தின் கோபுரத்துக்கான சிற்ப வேலைகள் - தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட கே.விஜயன், கோகுல் குழுவால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த சில மாதங்களாக நடைபெற்று வரும் இந்தச் சிற்ப வேலைகள் இன்னும் சில மாதங்களில் நிறைவுறும் எனவும் தெரியவருகிறது. (207)



ஆதிலட்சுமி சிவகுமார்

# அகநிலை மாற்றத்தின் அவசியம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

இதை வைத்து மகள் பொருளாதார சுதந்திரம் அடைந்துள்ளதாகக் கூற முடியுமா? என்று கேட்டாள் ஒரு பாடசாலை மாணவி.

அந்தக் கேள்வியில் இருக்கும் நியாயத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும். புறநிலைகளின் மாற்றம் விடுதலையை ஒருபோதும் குறியீடு செய்வதில்லை. 'ஆடைகளை மாற்றிக் கொள்வதல்ல சுதந்திரம் அகங்களை மாற்றிக் கொள்வதே சுதந்திரம்' என நினைவுக் குறிப்பொன்றில் (AUTO GRAPH) பார்க்க முடிந்தது.

பழைய காலத்தில் பெண்கள் வீட்டை விட்டு தொழிலுக்காக செல்வதில்லை. ஆனாலும், வீட்டிலிருந்தபடியே வருமானத்தை ஈட்டிக் கொண்டிருந்தார்கள். கூடியளவுக்கு சிறு சிறு கைத்தொழில் முயற்சிகளைச் செய்தார்கள். இவற்றால் பெண்களுக்குப் பொருளாதார சுயபலம் ஒன்று கிடைத்தது.

ஆனால் இன்று வீட்டைவிட்டு வெளியே சென்று தொழில் புரிவதே சுதந்திரம் என்ற எண்ணம் ஆழப் படிந்துள்ளது. பல இடங்களில் பணிகளுக்காகப் பெண்கள் உள்வாங்கப் படுகிறார்கள். பெண்களின் விழிப்புணர்வு, பெண்களின் விடுதலையைப் பற்றிக் கதைக்கின்ற பொழுதுகளில் பலர் கேட்கிறார்கள்.

'பெண்களுக்கு இப்ப என்ன சுதந்திரமில்லை? படிக்கிறார்கள். வேலை செய்கிறார்கள்... மோட்டார் சைக்கிள் ஓட்டுகிறார்கள்... இதை விட என்ன வேணும்?...

தர்க்கிப்பதற்காக இக்கேள்விகள் கேட்கப்பட்டாலும், இவற்றில் அறியாமையும் கலந்துதான் உள்ளது. பெண்கள் பெருமளவில் தொழில்வாய்ப்புப் பெறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. உலக சனத் தொகையில் பெண்களின் தொகை அதிகம். அத்தோடு பெண்கள் மலிவான கூலிகள். ஒரு ஆண் வேலையாட்களுக்குக் கொடுக்கின்ற ஊதியத்தில் இரண்டு பெண்களுக்குத் தொழில்வாய்ப்பு கொடுக்கலாம். இப்படியாக சில அனுகூலங்கள் காணப்படுகின்றமை.

வேலை செய்யும் பெண்களின் பிரச்சினைகளை இந்தப் பெண்களே கூட உணர்வதில்லை. 'கௌரவம்' என்ற போர்வைக்குள் பெண்களுடைய பல பிரச்சினைகள் மூடி மறைக்கப்பட்டு விடுகின்றன. பெண்கள் தம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு அஞ்சுகின்ற நிலை இன்றும் தொடர்கிறது.

தனக்குப் பாரபட்சம் காட்டப்படுகிற போது - புறக்கணிப்புச் செய்யப்படும் போது -அசௌகரியம் ஏற்படுத்தப்படும் போது - அவதூறு பேசப்படும்போது - தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்ற போது - நீதி வழங்கப்படாதபோது - பெண்கள் 'பேசா' மலிருந்துவிடுகிறார்கள். அல்லது அழுகிறார்கள்.

நான் எனக்குத் தெரிந்த பெண் ஒருவருடன் கதைக்கும்போது - அவர் தொழிலில் தான் எதிர்கொள்ளும் பிரச்சினை பற்றிக் கதைத்தார். 'ஏன் நீங்கள் தவறு செய்யாதபோது நீதி கேட்டிருக்கலாமே...' என்றேன்.

'வேலையால் நிப்பாட்டிவிட்டால் என்ன செய்வது? உங்களுக்குத் தெரியும் தானே என்னுடைய சம்பளத்தை நம்பித் தானே வீடு இருக்கு என்றார்'.


இப்படியாகத் தான் பல பெண்களின் நிலைமை காணப்படுகிறது. பலர் முன்னிலையில் பெண் கள் அவமதிக்கப்படுவதுண்டு. இந்த அவ மதிப்புகளுக்கு தங்களுடைய எதிர்ப்புகளை வெளிக்காட்டாத பெண்களை நான் பார்த்திருக்கிறேன். தமது சொந்தக்கால்களின் பலத்தில் நிற்க துணிச்சல் இல்லாததால் இந்த அவலம் நேர்கிறது.

இதேவேளை சுயதொழில் செய்யும் பெண்களை யாராலும் தாழ்த்தி விட முடியாது. சந்தையில் மரக்கறி விற்கும் ஒரு வயதான தாய் - ஆண்களுடன் போட்டி போட்டு செய்யும் தொழில் இந்த வியாபாரம். 'இந்த வேலையில் ஏதா வது பிரச்சினைகள் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டேன்.

'பிரச்சினைகளை எதிர் கொள்வேன் என்ற நம்பிக்கையில் தானே இந்த வேலைக்கு வந்தேன்...' என்ற படி மரக்கறி மூட்டையை ஒற்றைக் கையால் தூக்கிக் கொண்டு போனார். மகிழ்வாயிருந்தது.

ஆரம்பத்தில் அவர் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்ட போது சலசலப்புக் காட்டியவர்கள் இப்போது வாயே திறப்பதில்லையாம். பெண், பெண் என்பதற்காகவே பல துயரங்களை, அவலங்களை, அழுத்தங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. பெண்களுக்குள்ளும் ஆற்றல்கள், ஆளுமைகள், நிறைந்திருக் கின்றன என்பதை பெண்கள் வெளிக்கொண்டு வர வேண்டும். இதற்குப் பெண்கள் தங்கள் சிந்தனைகளில் விழிப்புப் பெற்று, அகநிலையில் மாற்றத்தை ஏற்படுதத்த வேண்டும்.

## நோயை விரட்டும் வெள்ளைப் பூண்டு



நோய்களை விரட்ட வெள்ளைப் பூண்டு ஒரு சிறந்த மருந்து. தினமும் ஒரு வெள்ளைப் பூண்டுப் பல் சாப்பிட்டு வந்தால் வைத்தியரை நாடவேண்டிய அவசியம் ஏற்படாது.

வெள்ளைப் பூண்டு மிகவும் சிறந்தது. உடல் ஆரோக்கியத்துக்கு, உடம்பில் கொழுப்பு அதிகம் இருப்பவர்கள் தினமும் இரவில் படுக்கும் முன் வெள்ளைப் பூண்டுப் பல்லைப் பச்சையாகக் கடித்து மென்று சாப்பிட கொழுப்பு போயே போய்விடும்.

சிலருக்கு வெள்ளைப் பூண்டின் வாசனை பிடிக்காது. அதுவும் பச்சையாக மென்று சாப்பிட வாசனை அதிகமாகவே இருக்கும். இவ்வாறு சாப்பிடுபவர்களின் வியர்வையில் கூட வாசனை நன்கு தெரியும். அநேகமான நோய்களை விரட்ட வெள்ளை பூண்டு மிகவும் சிறந்தது.

☆ மூலநோய் உள்ளவர்கள் வெள்ளைப் பூண்டு சாப்பிட்டு வர சிறந்த குணம் அடைவார்.

☆ இரத்தத்தைச் சுத்தம் செய்யக் கூடியது வெள்ளைப் பூண்டு.

☆ உடம்பில் உள்ள நச்சுப்பொருட்களை அழிக்கவும் இது உதவும்.

# வாழ்வில் வெற்றிபெற வேண்டுமா?

வாழ்வில் வெற்றிபெற வேண்டுமா? பிரச்சினைகளை எதிர்கொண்டு அழைத்து சவால்விட வேண்டுமா? எந்தச் சூழ்நிலையிலும் பதற்றம் கொள்ளாமல், புன்முறுவல் பூத்தபடி கடமையாற்றிக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து முயற்சிகள் செய்து வந்தபோதிலும், தோல்வியையே தழுவிக் கொண்டிருப்போமேயானால், நமது நடைமுறைகளையும், நடவடிக்கைகளையும் மாற்றிக்கொள்ள முற்படவேண்டுமேயொழிய விதியையோ, மற்றவர்களையோ குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கலாகாது! அத்தகைய சுழ்நிலைகளில் நிலைகுலையாமல் இருந்திட அத்தியாவசியமானதொரு குணாதிசயம், புன்முறுவல் எனப்படுகின்ற புன்சிரிப்புத்தான்.

இன்றைய காலகட்டத்தில் நம்மைப் பதற்றப்பட வைக்கக்கூடிய விடயங்கள் பல உள்ளன. படிப்பு சம்பந்தப்பட்டவை தவிர, தனிப்பட்ட விடயங்களிலெல்லாம் கூட குழப்பம் விளைவிக்கத்தக்க, டென்ஷன் தரவல்ல சமாச்சாரங்கள் பல உள்ளன.

அவற்றினால் பாதிப்பு ஏற்பட நாமே வழிவகுத்துக்கொண்டால் பெரிய பிரச்சினைகளில் நம்மைக் கொண்டு சென்று தள்ளிவிட்டுவிடும்! உடல் ரீதியாக மட்டுமல்ல மனரீதியாகவும் தான். ஆக, மனதைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுசென்று பக்குவமாக வைத்துக் கொள்ள நாம் பழகிக்கொள்ளவேண்டும். அதற்கு முதற்படி மனதை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்வதுதான். அதன் வெளிப்பாடு முகத்தில் தெரிந்துவிடும்! எப்படியாயின் அது புன்னகை பூத்த முகத்தின் வாயிலாக!

அதனால்தானோ என்னவோ "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்றார்கள் போலிருக்கிறது!

மனித மனமென்பது தூங்குகின்ற பயில்வான் போன்றது. சரியான முறையில் தட்டி எழுப்பி, தயவு செய்யாவிடில் சக்தி வீணாகிவிடும். அதற்கு இடம் கொடுக்கலாமா? இடம் கொடுக்காமலிருக்க மனதையும், உடலையும் பக்குவமாகப் பாதுகாத்திட வேண்டும்! அதற்குமுன் ஒரே வழி மனதை மகிழ்ச்சியாகவும், முகத்தை புன்முறுவல் பூத்தபடியும் வைத்துக்கொள்வதேயாகும்!

திறமையும், சாமர்த்தியமும், தொழில்நுட்ப அறிவும் நிரம்பப் பெற்றவர்கள்கூட கடமையின் சுமை காரணமாக மனம் நொந்து போவதுண்டு. அதைத் தவிர்க்க மனதை மட்டுமன்றி முக பாவத்தையும் திடமாக வைத்துக்கொள்ளப் பழக வேண்டும்.

யேசுநாதர் சொன்னதுபோல, எந்தச் சூழ்நிலையிலும் எந்தக் காரணத்துக்காகவும் பொறுமையிழந்து புன்னகையை விட்டுவிடலாகாது.

நேரிடையாக வந்து முகத்தில் அடித்தாற்போல பேசினால்கூட நிதானத்தை இழந்துவிடலாகாது. நிதானம் இழந்தால், முகபாவம் மாறும்; முகபாவம் மாறினால் முகம் புன்னகையை விட்டுவிட்டு விகாரமானதோர் வடிவினை வரவழைத்துக்கொள்ளும்! எனவே, இவற்றையெல்லாம் தவிர்த்திடுவதற்கான ஒரே நல்ல வழி எது நடந்தாலும், எது வந்தாலும், எது போனாலும் புன்னகை மாறாமல் முகத்தையும், அதன் மூலமாக மனதையும் நல்லமுறையில் வைத்திருப்பதுதான்!


நாம் நினைத்தது நிறைவேறாமல் போனால்கூட, புன்னகை மாறாத பொலிவோடு காரண காரியங்களை ஆராய முற்படவேண்டுமே ஒழிய, துவண்டு போய்விடக்கூடாது. அத்தகைய ஒரு வழக்கத்தைப் பழக்கப்படுத்திக்கொள்வோமேயானால், வெற்றி நிச்சயம்! ஆக, வாழக்கையில் வெற்றி அடைய மாறாத புன்னகையுடன் காரியமாற்றுவதே சீரிய வழி.



எல்லோரும் விரும்பும் ஆளாக மாற தயாராகிவிட்டீர்களா?

இனிமேல் உங்களை யாரும் வெறுக்க முடியாது.

# உள்ளத்தைப் புறக்கணிக்கும் திருமணங்கள்




சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது தான் திருமணம். ஆனால், அதைப் பலர் ரொக்கத்தால் நிச்சயித்துவிட்டு, பாதி வாழ்க்கையில் செய்வதறியாது திண்டாடு கிறார்கள்.

திருமண பந்தத்தில் இணைத்து வைப் பதில் பொருளாதார வசதிகளை எவ் வளவு முக்கியமாகக் கருதி ஆராய் கிறார்களோ? அதை விடவும் மேலாக ஆண், பெண் இருவரினதும் குண நலன் களையும், மனப் பொருத்தத்தையும் ஆராய வேண்டும்.

எங்குமே பெண் பார்க்கும் படலங் கள். ஊர் சுற்றித் திரிந்தாலும் உண்மை முத்து சிப்பிக்குள் இருப்பதை மறந்து விடுகிறார்கள். அடக்க ஒடுக்கமான பெண் வேண்டாம். நாகரிகமான பெண் தான் வேண்டும் என்று வாய்கூசாமல் கேட்கிறார்கள் இன்றைய இளைஞர்கள். திருமண பந்தத்தின் நோக்கம் -மன அமை தியைப் பெறுவதாகும். இந்த அமைதிக் காக மனிதன் எந்தவிலை கொடுக்கவும், வாங்கிக்கொள்ளவும் தயாராக இருக் கிறான். ஆனால், எந்த விலையும் மன அமைதிக்கு ஈடு கொடுக்கமாட்டாது. விலையால் வாங்க முடியாதது அன்பு ஒன்றுதான். ஒரு மனிதனின் மனப் பொரு த்தம் திருமணத்தில் அற்றதாக இருப்பின், வாழ்வில் அமைதியின்மை போன்ற பல பிரச்சினைகள் உருவாக அதுவே அடித் தளமாகவும் அமையும்.

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். இது மனம் சம்பந்தப்பட்டதாக அமையவேண்டும். மனதைப் புறக்கணிக் கும் திருமணத்தில் உடல்கள் இணைவ தால், வாழ்க்கையில் பயன் எதுவுமே யில்லை.

இந்த விடயத்தில்தான் அநேக தம்பதி கள் தவறி விடுகிறார்கள். வாழ்க்கையில் மனப்பொருத்தம் இல்லாவிடத்து, முழு வாழ்வுமே சீர்கெட்டுப் போய்விடும்.

பெண் என்பவள் சமைத்தால் மட்டும் போதாது. ஆண் என்பவன் உழைத்தால் மட்டும் போதாது. வாழ்க்கையில் வசதிக ளுக்கு மேலாக ஒரு ஆணோ - பெண் ணோ எதிர்பார்ப்பது கணவன் - மனைவி இருவருக்கும் இடையில் நாம் ஒருவர் என்ற அந்நியோன்யமான பாசத்தைத் தான்.

நம்மில் அநேகரிடம் அது இல்லாமை யினாலே வாழ்வு முழுவதும் போராட் டமாக அமைகிறது. அன்பான பேச்சு, இதமான அரவணைப்பு இவைகளுக் காகவே மனம் அனுதினமும் அவாவுறு கிறது. இதனால் ஏற்படும் நிம்மதியே மன நிம்மதியாகக் கருதப்படும்.

கணவன் - மனைவி உரிமைகளும், கடமைகளும் சடப்பொருள் சம்பந்தப் பட்டதல்ல. உண்மை சம்பந்தப்பட்ட தாகும். குடும்ப வாழ்வுக்காக அவாவுறும் ஆணுக்கோ, பெண்ணுக்கோ அன்பு கிடைக்காதவிடத்தில் அங்கே முரண் பாடுகளும், பிடிவாதங்களும், ஆதங்கங் களும் ஏற்படுகின்றன.

இதனால் உள்ளங்களில் உற்சாக மிழந்து ஏதோ கடமைக்காக வெவ்வேறு துருவங்களைப் போல வாழும் நிலைக் குத் தள்ளப்படுகிறார்கள். தம்பதிகள் மனம் கொண்டதே மனிதனுக்கு மாளி கையாகிறது. மனம் இல்லாதவிடத்தில் மாளிகையில் வாழ்ந்தாலும், மனதில் சீறல்களே இருக்கும்.

குடும்ப வாழ்வின் அத்திவாரம் இரண்டு உள்ளங்கள் இணைவதாகும். இந்த இருவரும் வாழும் உலகமே சமூகத் தோடு சங்கமிக்கிறது.

குடும்ப வாழ்வில் கணவன் - மனைவி இருவருமே ஒருவருக்கு ஒருவர் மனம் விட்டுப் பேசவேண்டும். இவ்வாறு மனம் விட்டுப் பேசாமல் இருப்பதுதான் குடும் பப் பிரச்சினைகளின் மூலவேராகும்.

எது பேச? எதைப் பேச? என்று சிந்திக் கலாம். உடல் நலம்பற்றிப் பேசலாம். தொழில் பற்றியும், வரவு - செலவு பற் றிப் பேசலாம். குழந்தைகள் பற்றிப் பேச லாம். நம்மைப் பற்றி நாமே பரிமாறிக் கொண்டு மகிழலாம். எவ்வாறான வேலைக்கு மத்தியிலும் நாம் எமது வாழ்வைப் புறக்கணிக்கக்கூடாது. வாழ்க் கைக்கு வேண்டிய அத்தனை பொருளா தார வசதிகளும் மனம் சம்பந்தப்பட்ட தல்ல.

அதனால் ஏற்படும் திருப்தியும் நிலை யற்றதல்ல.

மனதளவில் கணவன் - மனைவி நேசிக்காதவரை வாழ்வு கசப்பாகவே அமையும்.

உள்ளத்தைப் புறக்கணிக்கும் திரு மணம் ஊசலானது. நிலையற்றதாகவே அமையும். ☆

## உருளைக்கிழங்கு



வறுவல், பொரியல், கூட்டு, சாம்பார் என்று எல்லாவற்றுக்குமே தனிசுவை சேர்க்கும் உருளைக் கிழங்கு ஒரு தனித்துவமான மரக்கறி.

உருளைக்கிழங்கு வாங்கும் போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயம்.

☆ கிழங்கு முளை விடாமல் இருக்க வேண்டும்.

☆ கிழங்கில் பச்சை பச்சையாக நரம்பு ஓடாமல் இருக்க வேண்டும்.

☆ லேசாகக் கீறிப் பார்த்தீர்கள் என்றால், தோல் உடனே கையோடு பெயர்ந்து வர வேண்டும். அது சிறந்த கிழக்காக இருக்கும்.

## இது இயற்கை உணவுக் காலம் -

## காய்கறிகளை பச்சையாக சாப்பிடலாமா?



(சென்றவாரத்தொடர்ச்சி..)


அதேபோல் தக்காளிப்பழத்தை அப்படியே சாப்பிடுவது நல்லதுதான். என்றாலும் தக்காளியிலுள்ள லைகோபின் என்ற பொருள் அதனை வேகவைத்தோ அல்லது சலட்டாகவோ சாப்பிடும் போதுதான் கிடைக்கிறது. இந்த லைகோபின்தான் பெருங்குடல், சிறுநீரகப்பை ஆகியவற்றில் வரும் புற்று நோய்க்கு எதிராகப் போராடு கிறது.

முட்டை பச்சையாக குடிப்பதைப் பல பேர் பழக்கமாகக் கொண்டுள்ளார்கள். இதுதவறு. முட்டையை வேகவைத்துச் சாப்பிட்டால் மட்டுமே அதிலுள்ள பக்றீரியாக்கள் நீங்கும். சத்தும் நமது உடலுக்குக் கிடைக்கும்.

நார்ச்சத்து விற்றமின்கள் மற்றும் தாதுச்சத்துக்கள் காய்கறிகளில் நிறைந்திருக்கிறது. அவற்றை அப்படியே தக்க வைத்துக்கொள்வது நாம் சமைக்கும் முறையிலேயே உள் ளது. காய்கறிகளை நன்கு அவியும் வரை வேகவைத்தால், அதிலுள்ள விற்றமின் C மற்றும் போரிக்கமிலம் அழிந்துவிடும். கர்ப்பிணிகளுக்கு உடலில் போலிக்கமிலம் குறைந்தால், குழந்தையின் முதுகெலும்பு சரியாக உருவாகாமல் போய்விடும் என்பது கவனிக்க வேண்டிய ஒரு தகவல். இதைவிட பச்சையாக எதைச் சாப்பிடலாம் எனப் பார்த்தால், காய்கறிகள் மட்டுமல்லாமல் - எள்ளு, கச்சான் போன்றவற்றையும் பச்சையாகச் சாப்பிடலாம். விற்றமின் A நிறைந்திருக்கும் பூசணி விதையை பச்சையாகச் சாப்பிடலாம். சிலர் முளைகட்டிய பயிற்றை பொரித்து சாப்பிடுவார்கள். இது தவறான முறை. சமைத்துச் சாப்பிட்டால் அதிலுள்ள விற்றமின் C அழிந்து விடுகிறது.

அதேபோல் பெரிய நெல்லிக்காயையும் பச்சையாகச் சாப்பிடவேண்டும். ஒரு நெல்லிக்காயில் நான்கு ஒரேஞ் பழத்துக்கு நிகரான சத்து நிறைந்துள்ளது. அதனைத் அவித்து சாப்பிட்டு விற்றமின் C முழுவதையும்இழந்து விடாதீர்கள்.

## கருவிலேயே குழந்தையின் குறைபாடுகளை உடனடியாக தீர்க்க உதவும் ஸ்கானிங் முறை!



(சென்றவாரத் தொடர்ச்சி...)

இதில் உள்ள வேறுபாடு கவ னிக்கும் மக்கள் ஸ்கான் சாதனத் தின் மீதே சந்தேகப்பட ஆரம்பிக் கிறார்கள். 500 ரூபா முதல் 1500 ரூபா வரை ஸ்கானுக்காக பண த்தை அறவிடுவதைப் பார்க்க முடிகிறது.

சிலர் அளவுக்கதிகமாக லாபம் சம்பாதிக்க நினைப்பதால் ஸ்கான் செய்வதையே வெறுத்தால் அது சரியாக இருக்குமா? எனவே கருத் தரித்த ஒவ்வொரு பெண்ணும் அவ சியம் ஸ்கான் செய்து கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வளரும் குழந்தைக்கு ஏதாவது குறை இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தால் அதை அப்போதே சரிசெய்து விடக்கூடிய அளவுக்கு மருத்துவமுறை முன் னேறிவிட்டது. வயிற்றில் வளரும் குழந்தைக்கு உட னேயே மருந்துச் சிகிச்சை செய்ய வேண்டிய அவசி யம் ஏற்பட்டால் உட னேயே செய்து விடலாம். அல்லது குழந்தை பிறந்த பிறகு செய்யலாம் என்ற நிலையிருந்தால் பிறந்தவுடனேயே செய்து கொள்ளலாம். ☆

**வயிற்றில் வளரும் குழந்தைக்கு ஏதாவது குறை இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தால், அதைஉடனேயே சரி செய்து விடக்கூடிய அளவுக்கு மருத்துவத்துறை முன்னேறிவிட்டது.**

# வவுனியா - ஓமந்தை புத்தர்சிலை தொடர்பாக கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு!



வவுனியா—

வவுனியா- ஓமந்தை பிள்ளையார் கோவில் காணியில் புத்தர் சிலையை இராணுவத்தினர் அமைத்துள்ளனர். மூன்றடி உயரத்தில் காணப்படும் இந்தப் புத்தர்சிலை - கடந்த மார்ச் மாதம் நிறுவப்பட்டது. இது தொடர்பாக நேரில் கண்டறிவதற்காக அந்தப்பகுதிக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் - அங்கு பொது மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தினர். கடந்த இரண்டு மாதங்களாக அந்தக் கோவிலில் பூசை வழிபாடுகள் எவையும் நடைபெறவில்லையென அந்தப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளனர்.

ஆலய காணியின் உறுதிப்பத்திரத்தை தம்மிடம் தரவேண்டுமென பிள்ளையார் கோவில் குருக்களாக இருந்தவரை படையினர் சித்திரவதை செய்து, அச்சுறுத்தி வந்ததாகவும் இதனால் அவர் அச்சமடைந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்றுவிட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அங்கு வாழ்ந்த குருக்களின் நான்கு தலைமுறையினர் இந்தப் பிள்ளையார் ஆலயம் அருகிலேயே வசித்து வந்ததாகச் சுட்டிக்காட்டும் அந்த மக்கள் - தம்மை கட்டாயப் புகைப்படம் எடுத்துள்ள இராணுவத்தினர் - புத்தர் சிலைக்கு எதிராக எதுவித போராட்டத்தையும் நடத்தக்கூடாது எனவும் எச்சரித்துள்ளனர்.

இராணுவத்தினர் அங்கு இருப்பதால் பொது மக்கள் கோயிலுக்குச் செல்ல அச்சமடைந்த நிலையில் இருக்கின்றனர்.

தற்போது நிறுவப்பட்டிருக்கும் புத்தர் சிலைக்கு அருகில் பல நூற்றாண்டு காலத்துக்கு முன்னர் வைரவர் சிலை இருப்பதைச் சுட்டிக்காட்டும் மக்கள்- அந்தக் கோவிலில் இருந்த பழமையான பளிங்குக் கற்களைக்கொண்டே திடீர் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளதாகவும், போதிமரம் ஒன்றையும் அருகாமையில் நட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஓமந்தை மகா வித்ததியாலயத்துக்கு எதிரே முகாமிட்டுள்ள இராணுவத்தினர் - வெசாக் பண்டிகை அன்றே பழமையான புத்தர் ஆலயம் இருப்பதாக சிங்கள மொழியில் எழுதி வைத்துள்ளனர்.

பல தலைமுறையினராக அந்தப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள் - இதுவரையில் அப்படியானதொரு ஆலயம் தமது பகுதியில் இருந்ததே இல்லை. தற்போது இராணுவத்தால்தான் இது உருவாக்கப்பட்டது எனவும் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர், வன்னி இராணுவத் தளபதி ஆகியோருடன் கலந்துரையாடியதாகவும், இந்தப் பிரச்சினைக்குச் சுமுகமான முறையில் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படுமென அவர்கள் தம்மிடம் தெரிவித்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விடயம் குறித்து வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

# செ ன்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவால் மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சிநெறி!

கிளிநொச்சி—

வன்னி சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினரால் கடந்த மாதம் பல முதலுதவிப் பயிற்சி நெறிகளும், பல்வேறு சேவைகளும் வழங்கப்பட்டன.

முதலுதவிப் பயிற்சிநெறித் திட்டத்தின்கீழ் கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து - கிளிநொச்சி, பூநகரி பிரதேசங்களில் தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் மரவேலை, வானொலி திருத்துநர், மேசன் பயிற்சி பயிலும் மாணவர்களுக்கும், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுடன் இணைந்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் அளம்பில், குமுழமுனை, செம்மலை, வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்றைச் சேர்ந்த மாணவர்கள், தொண்டர்கள், விவசாயிகள் ஆகியோருக்கும் இந்தப் பயிற்சிநெறிகள் வழங்கப்பட்டன.

மேலும் கிளிநொச்சி மத்திய கல்லூரி, முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயம் மற்றும் புதுக்குடியிருப்பு கணக்கியல் கல்லூரி மாணவர்களும் இந்தப் பயிற்சிநெறியை நிறைவு செய்துள்ளனர்.

கிளிநொச்சியில் நிதியியல் கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சிநெறியை ஆரம்பித்து நடத்தியும் வருகிறது. மற்றும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலுள்ள நோயாளிகளுக்கு ஒரு தொகுதி உடைகளும், பால்மா வகைகளும் படைப்பிரிவினரால் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களில் பாடசாலை மாணவர்களுக்கும், மருதங்கேணி பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு மக்கள் தங்கியிருக்கும் இடைத்தங்கல் முகாம்களைச் சேர்ந்த மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகளுக்கும், செஞ்சோலை சிறுவர் இல்ல மாணவர்கள் ஆகியோருக்கும் முதலுதவிப் பயிற்சிநெறிகளை வழங்குவதற்கு வன்னிமாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவு திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சின்னப் புதுக்குளம் பகுதியில் 85 வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை!

வவுனியா—

வவவுனியா- சின்னப்புதுக்குளம் பகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு நோர்வே நாட்டின் வெளிவிவகார அமைச்சின் அகதிகளுக்கான அமைப்பு 85 வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அந்த அமைப்பால் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்படவுள்ளன. வீட்டின் உரிமையாளர்கள் தமது பங்களிப்பின் ஊடாக இந்த வீடுகளைக் கட்டிமுடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. 1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த மக்கள் - தற்போது படிப்படியாக மீளக்குடியமர்ந்து வருகிறார்கள். வீடுகள் அனைத்தும் அழிக்கப்பட்ட நிலையில் தற்காலிகமான கொட்டைககளில் வாழ்ந்து வரும் இந்த மக்களுக்கு இவ்வாறு ஒரு திட்டம் மூலமாக வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக அந்த அமைப்பின் பிரதிநிதி தெரிவித்தார்.

## கௌரவிப்பு விழா

கிளிநொச்சி

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் ஓவியர் புகழேந்தியின் ஓவியப் பயிலரங்கும், ஓவியக் கண்காட்சியும் அண்மையில் நடைபெற்றது. இந்த செயற்பாட்டை கௌரவிக்கும் நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு அழகியல் கலாமன்றத்தில் நடைபெறவுள்ளது.






வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் வாழ்வாதாரங்களை இழந்த மக்களுக்கு ஜேர்மன் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதிப்பங்களிப்பால் கடற்தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட முக்கிய பிரமுகர்களையும் - உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்படுவதையும் படங்களில் காணலாம்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜூன் -03

1657: - இரத்தச் சுற்றோட்டத்தைப் பற்றி முதன்முதலாகக் கண்டுபிடித்துக்கூறிய இங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவவியலாளர் வில்லியம் ஹார்வே மரணமானார்.

1769: - சூரியனின் சுற்றுவட்டப் பாதைக்குக் குறுக்காக சுக்கிரன் கிரகம் கடந்துசென்றது. நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை மிக அபூர்வமாக நடக்கும் நிகழ்ச்சி இதுவாகும்.

1917: - அல்பேனியாவின் கூட்டாட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதாக இத்தாலி அறிவித்தது.

1918: - விமானப்போரில் வீரச் செயல்களைப் புரிந்தவர்களைக் கௌரவிக்கும் பிரிட்டனின் "டிஸ்டிஸ்யூஸ்ட் ஃப்ளையிங் கிராஸ் (D.F.C)" என்ற அமைப்பு நிறுவப்பட்டது.

1918: - தமது நாட்டு விடுதலைக்காகப் போராடும் போலந்து, யூகோஸ்லேவியா, செக்கோஸ்லாவாக்கியா ஆகிய நாடுகளுக்கு இத்தாலி, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் தாம் ஆதரவு தருவதாக அறிவித்தன.

1929: - அரிக்கா ஒப்பந்தம் என்று அழைக்கப்படும் ஒப்பந்தம் பொலிவியா, சில்லி, பெரு ஆகிய நாடுகளிடையே கையெழுத்திடப்பட்டது. இதன்படி அரிக்கா பிரதேசம் சில்லிக்கும், டாக்னா பிரதேசம் பெருவுக்கும் கிடைத்ததுடன் இவற்றுக்கிடையிலான புகையிரதப் போக்குவரத்து உரிமைகள் பொலிவியாவுக்குக் கிடைத்தது.

1937: - காதலுக்காக முடிதுறந்த இங்கிலாந்தின் எட்டாம் எட்வேட் மன்னர் அமெரிக்காவைச் சேர்ந்த விதவைக் காதலியான சிம்ஸனை திருமணம் புரிந்தார்.

1942: - இரண்டாம் உலகப் போரில் பசுபிக் அரங்கில் மிகப்பெரிய கடற்போர் நிகழ்ந்தது. அமெரிக்க, ஜப்பானிய விமானங்கள், விமானம் தாங்கிக் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆகியன இதில் பங்குகொண்டன. அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பலான யார்க் டவுன் மூழ்கடிக்கப்பட்டது. ஜப்பான் தரப்பில் நான்கு விமானம் தாங்கிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

1942: - டச்சு நாட்டைச் சேர்ந்த பிரிட்டிஷ் ஒற்றன் லாவர்ஸ் பரசூட் மூலம் நெதர்லாந்தில் இறக்கப்பட்டார். இறங்கிய உடனேயே ஜேர்மனி அவரைச் சிறைப்பிடித்தது. அவரைத் தங்களது ஒற்றனாகப் பயன்படுத்திக்கொண்டு தவறான தகவல்களை லண்டனுக்கு அனுப்பியது. நோர்த் போல் படை நடவடிக்கை என ஜேர்மனி இதற்குப் பெயர் சூட்டியது. இந்த நடவடிக்கையால் மேலும் 50 ஒற்றர்களை ஜேர்மனி சிறைப்பிடிக்க முடிந்தது. தான் சிறைப்பட்டதை லாவர்ஸ் தான் அனுப்பும் செய்தியில் மறைமுகமாகத் தெரிவித்திருந்தும் லண்டனால் அதனைப் புரிந்துகொள்ளமுடியவில்லை.

1947: - மவுண் பேட்டன் திட்டம் எனப்படும் இந்திய பிரிவினைக்கான விரிவான வழிமுறைகள் துரிதமான அதிகார மாற்றம் டொமினியன் அந்தஸ்து போன்றவைகள் அடங்கிய திட்டத்தை மவுண் பேட்டன் பிரபு அறிவித்தார். இந்தத் திட்டத்தின்படி ஓகஸ்ட் 14 ஆம் திகதி பாகிஸ்தான் உருவாகியது.

1957: - துருக்கி, ஈராக், ஈரான், பிரிட்டன், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இணைந்து கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்புக்கு எதிராக உருவாக்கிய பக்தாத் ஒப்பந்தத்தில் இணைந்து கொள்ளும் நாடுகளுக்கு எல்லா விதமான உதவிகளையும் அளிப்பதாக அமெரிக்கா அறிவித்தது. கராச்சியில் நடந்த பக்தாத் ஒப்பந்த நாடுகள் மாநாட்டில் தானும் அங்கத்தினராக இணைந்துகொண்டது.

1959: - பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக இருந்த சிங்கப்பூர் கொமன்வெல்த் கூட்டமைப்பின் கீழ் சுதந்திர நாடானது.

1963: - உலக சமாதானத்துக்கும், கிறிஸ்தவர்களது ஒற்றுமைக்கும் பாடுபட்டுவந்த போப் பாண்டவர் 23 ஆவது ஜோன் காலமானார்.

1966: - ஜெமினி -9 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது. இதில் சென்ற விண்வெளி வீரர்களில் ஒருவரான யூஜின் செர்ணாம் என்பவர் 127 நிமிடங்கள் விண்வெளியில் நடந்தார்.

1973: - பாரிஸில் நடந்த விமானக் கண்காட்சியில் ரஷ்யாவின் ட்யூப்லெங் -144 எனும் ஒலியை விட வேகமாகப் பறக்கும் விமானம் கௌஸ்ஸன் வில்லா என்ற நகரில் வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில் 14 பேர் இறந்தனர்.

1977: - தசைகள் வெப்பத்தை உண்டுபண்ணுகின்றன என்பதைக் கண்டுபிடித்தமைக்காக 1922 ஆம் ஆண்டு மருத்துவத் துறைக்கான நோபல் பரிசை வென்ற பிரித்தானிய விஞ்ஞானி சேர்.ஆர்ச்சி போல்ட் வியின் ஹில் மரணமானார்.

1992: - ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் வளர்ச்சி மாநாடு பிரேசில் றியோ -டி - ஜானெய்ரோ நகரில் ஆரம்பமாகியது. பன்னிரெண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இந்த மாநாட்டில் 150 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கலந்துகொண்டனர்.

1994: - சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை ஒழிக்க ஒத்துழைப்பது பற்றிய இந்திய - ரூமேனியா ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

1994: - பகமாஸ் நாட்டில் தொழிலாளர் தினம்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்*
*குற்றமே கூறி விடும்!*

திருக்குறள்

## நமது நோக்கு

### வரலாற்றின் மௌன சாட்சியங்களை திட்டமிட்டே அழிக்கும் செயற்பாடுகள்!

யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் - நாவற்குழிப் பகுதியில் அதாவது, யாழ்.மாநகர எல்லையில் அமைந்துள்ள யாழ்.நகருள் நுழையும் மக்களை வரவேற்கும் தன்மையிலான அலங்கார வளைவு திருத்தியமைக்கப்பட்ட நிலையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்களுக்கு எதிரான தென்பகுதி சிங்கள ஆட்சியாளர்களின் யுத்தத்தின் வடுக்கள் பலவற்றையும் தாங்கி, கொடூரமான இராணுவ நடவடிக்கைகள் யாழ்.குடாநாட்டு மக்களை எப்படியெல்லாம் பாதித்தது என்பதை யாழ். நகருள நுழைவோர் அனைவருக்கும் உணர்த்தும் மௌன சாட்சியாய், ஒரு வரலாற்றுப் பதிவுச் சின்னமாய் இருந்து வந்த இந்த வளைவு - அதன் காயங்கள் மறைக்கப்பட்டு, வர்ணம் பூசப்பட்டு ஏதோ புதிதான ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வாக்கப்பட்டதன் மூலம், தமிழ்மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்தி நின்ற அடையாளச் சின்னம் ஒன்றின் காலப் பதிவுகள் யாவும் மறைக்கப்பட்டுள்ளன.

ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டம் என்பது வரலாற்றுப் பதிவாகும்போது எதிரிகளால் அந்த இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், கொடுமைகள், இராணுவ நடவடிக்கைகளின்போதும் பல்வேறு வகைப்பட்ட தாக்குதல்களின்போதும் ஏற்பட்ட அழிவுகள் மற்றும் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை இலக்குவைத்துத் தாக்கப்பட்டதன் சிதைவுகள் என்பவற்றை அடையாளப்படுத்தி - காலத்தின் சாட்சியாய் விளங்குபவை இத்தகைய கட்டடங்கள், வளைவுகள், நினைவுச் சின்னங்கள், கலாசார மையங்கள், வணக்கத் தலங்கள், கல்லூரிகள் போன்றவைகளேயாகும்.

சமாதான காலத்தில் இவை திருத்தம் செய்யப்படவோ, புனர்நிர்மாணம் செய்யப்படவோ நேரிடுதல் தவிர்க்க முடியாத ஒன்றே. ஆனாலும், இவற்றில் சிலவற்றை வரலாற்றுச் சின்னங்களாக - கடந்தகாலச் சரித்திரத்தின் ஆதாரங்களாகப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினரின் உணர்வுபூர்வமான சிந்தனைக்கு ஊற்றுக்கண்ணாக அமைய இவற்றைப் பேணிப்பாதுகாக்க வேண்டியது ஒரு வரலாற்றுக் கடமையேயாகும்.

காலவோட்டத்தால் ஏற்படும் இயற்கைச் சிதைவுகளுக்குள்ளான கட்டடங்கள், கலாசார மையங்கள் போன்றவற்றைக்கூட அது எப்படியிருக்கிறதோ அதேநிலையிலேயே பேணிப்பாதுகாக்க எல்லா நாடுகளும் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டுவருவது தெரிந்த விடயமேயாகும். அவை வரலாற்றைச் சுமந்துநிற்கும் மனித குல முதுசங்களாகும். நம்மை, நமது வாழ்வுக்கான போராட்டத்தை, நமது மாண்புகளை, நம்மீது திணிக்கப்பட்ட வரலாற்று அழுத்தங்களை, நாம் எதிர்கொண்டு முறியடித்த விதத்தை நமது வருங்காலச் சந்ததியினர் அறிய நேரும்போது இந்தச் சிதைவுகள்தான் அவர்களுக்கு தங்கள் முன்னோர் தங்களுக்காக ஒரு தேசத்தை, கலாசாரத்தை, பெருமைக்குரிய ஒரு பண்பாட்டு செழுமை கொண்ட பாரம்பரிய வாழ்வியலைப் பேணிப்பாதுகாத்து தம்மிடம் ஒப்படைக்க பட்டபாடும், நடத்திய போராட்டங்களும் எத்தகைய பெருமிதத்திற்கும் மரியாதைக்கும் உரியவையென்று உணர்த்தப்போதுமான - அவசியமான வரலாற்றுச்சான்றாக இருக்கப்போகின்றன.

ஜப்பானில் இரண்டாம் உலகப்போரின்போது வீசப்பட்ட அணுகுண்டினால் ஏற்பட்ட வரலாற்றுத் துயரமிகு பேரழிவுகளின் எச்சங்கள் இன்னமும் அப்படியே பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. அதனைப் பார்க்கும் ஒவ்வொரு ஜப்பானியருக்கும் சிதைக்கப்பட்ட தன் தேசத்தை உலகில் தலைநிமிர்ந்து நிற்கும்வண்ணம் உழைக்கவேண்டுமென்ற உணர்வு தோன்றுமாம்....

ஜப்பான் தேசம் எல்லா வகையிலும் கம்பீரம் காட்டி நிற்பதற்கு வரலாற்றின் எச்சங்கள் அவர்களுக்கு உணர்த்தி நிற்கும் தங்கள் தேசம் மற்றும் தேசியம் பற்றிய உணர்வே காரணமாகும்.

ஆனால், நாம் நமது வரலாற்றையே பூசிமெழுகி, மறைத்து வர்ணம் பூசி அழித்துவிட்டு கைதட்டி எதிரிகளின் மனம் குளிரவைப்பதில் நிறைவடைபவர்களாக இருப்பதுதான் வெட்கமாகவும் வேதனையாகவும் உள்ளது.

உலகில் மிக மோசமான பண்பாட்டுக் கொலையென வரலாற்றில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள யாழ். நூலக எரிப்பின் சிதைவுகளை - எச்சத்தைப் பாதுகாத்து வரலாற்று ஆவணமாக்கத் தவறிவிட்டோம். பூசி மெழுகி, வர்ணம் அடித்து, புதுக்கோலம் கொள்ளவைத்து எமக்கு இழைக்கப்பட்ட மாபெரும் வரலாற்று, கலாசார அழிப்புக் கொடுமையை மறைத்து எதிரிகளின் மிலேச்சத்தனத்தை மறைக்க எம்மவர்களே முன்னின்ற கொடுமை கண் முன்னே நடந்துமுடிந்து.... அதன் துயரம் இன்னமும் நெஞ்சை அழுத்திகொண்டிருக்கும்போதே அதே நூலகம் எரியூட்டப்பட்ட நாளில் இந்த வரவேற்பு வளைவின் வரலாற்று முக்கியத்துவம் மறைக்கப்பட்டுள்ளது.

பூசி மெழுகி, வர்ணமயமாக்கப்பட்டது இந்த நூலகக் கட்டடத்தின் எரியூட்டப்பட்ட சுவர்களின் உட்சிதைவுகளும, கருங்கற்களும், உடைவுகளும் மட்டுமல்ல, இந்த வரவேற்புவளைவின் மறைக்கப்பட்ட நிலையிலுள்ள துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த துவாரங்களும் வெடிப்புகளும் தமக்கேற்பட்ட வரலாற்று அநீதிகளை மறைக்க முயன்றவர்களை சபித்துக்கொண்டே இருக்கும்.

புதிய நூலகத்தை உருவாக்கியிருக்கலாம். புதிய வளைவை நிர்மாணித்திருக்கலாம். வரவேற்கலாம். ஆனால், வரலாற்றை மறைக்க, மறக்கவைக்க முயல்வதை விடவும் கொடுமை எதுவும் கிடையாது. வருங்காலத் தலைமுறை இதற்காக எம்மை மன்னிக்கவும் போவதில்லை.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# குற்றங்களைத் தடுக்க, துப்பறிய இலங்கைக்கு இன்று தகுதியில்லை!

இலங்கையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் துவான் நிசாம் முத்தலிப் கொழும்பில் க லைவேளையில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவமே இன்று ஒரே பேச்சாக இருக்கிறது.

எப்படி இது நடந்தது? என்ற கேள்வியே எங்கும் கேட்டுக்கொண்டிருக்கிறது. கொழும்பு ஊடகங்கள், அரசாங்கம், காவல்துறையினர் என்று எல்லாப் பகுதியினரும் விடுதலைப் புலிகளே இந்தக் கொலையைச் செய்தார்கள் என்று கூறுகின்றன. ஆங்கிலப் பத்திரிகையொன்று அதன் தலையங்கத்தில் கொழும்பில்கூட புலிகளின் புலனாய்வுத்துறை நல்லமுறையில் இயங்குகிறது என்று சுட்டிக்காட்டப்படுவதாக எழுதுகிறது என்று சொல்லிக்கொண்டு வந்தார் நண்பர் பரமசிவம்.

கொழும்பில் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த அதிகாரி கொல்லப்பட்டது இதுதான் முதல் தடவையல்ல. இதற்கு முன் பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒரு கொலையைத் தவிர மற்றக் கொலைகளிலெல்லாம் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும், கொழும்பில் இதுவரை ஆயுதங்கள் கண்டெடுக்கப்படவில்லை என்றும் இந்தப் பத்திரிகை எழுதுகிறது. புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரி அதுவும், இளம் குடும்பத் தலைவன் நிசாம் கொல்லப்பட்டது பலருக்கும் கவலையளிக்கத்தான் செய்யும். ஊடகவியலாளர் சிவராம் கடத்தப்பட்டு சிலமணி நேரத்துக்குள்ளேயே கொலை செய்யப்பட்ட செய்தியும் எவ்வளவு வேதனையையும், கலக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கும். சிவராம் கொலை செய்யப்பட்டு ஒரு மாதத்துக்கு மேலாகியும் புலனாய்வுத்துறை இன்னமும் இந்தக் கொலையில் கொஞ்சமாவது முன்னேற்றம் கண்டதா? என்று கேட்டேன்.

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டு வருவது பற்றியும், புலனாய்வுத் துறையிலுள்ளவர்களைப் புலிகள் கொன்றொழித்துவிடுவார்கள் போலிருக்கிறதே என்று ஆதங்கப்படும் கொழும்பு ஊடகங்கள் - சிவராம், நடேசன், நிமலராஜன், அற்புதன் ஆகியோரின் கொலைகள் பற்றித் துப்புத்துலக்காததற்காக யாரையும் குறைசொல்லவில்லை, யார் மீதும் தங்கள் விரலைச் சுட்டிக்காட்ட முன்வரவில்லை என்று பரமசிவம் சொன்னார்.

புனர்வாழ்வு பெறுவதற்கென்று அரசாங்கத்தின் பாதுகாப்பில் பண்டாரவளையில் பிந்துனுவெவ என்ற இடத்தில் முகாமில் வைக்கப்பட்டிருந்த தமிழ்ச் சிறுவர்கள் உட்பட இருபத்தியேழு தமிழ் இளைஞர்கள் அதுவும் எதுவித ஆயுதமுமில்லாமல் இருந்த அந்தப் பிஞ்சுகள் கொஞ்சமும் இரக்கமற்ற முறையில் குத்தியும், வெட்டியும், தீவைத்துக் கொளு த்தியும் படுகோரமாகக் கொலைசெய்யப்பட்டனர். இவர்களைக் கொலை செய்தவர்கள் யார் என்றே தெரியாத நிலையில் இன்று அரசாங்கம் இருக்கிறது. இந்தப் பிரச்சினைகளின் கோர மரணத்துக்காக எந்தச் சிங்கள அரசியல்வாதிகளோ, எந்தச் சிங்களத் தலைவர்களோ, எந்தச் சிங்கள ஆன்மீகத் தலைவரோ கவலை தெரிவிக்கிறார்களா, கண்டனம் தெரிவிக்கிறார்களா? என்று கேட்டேன்.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 பேர் படுகொலை செய்யப்பட்டதும், மேலும் 14 பேர் காயமடைந்ததும், இந்தக் கொலைகள் கோரமானதாகவும், மிக அசிங்கமானதாகவும் இருந்ததென்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம்தான் பொறுப்பு என்பதும் நிறுவப்பட்டதே. ஆனால் இந்தப் படுகொலைகளைச் செய்தவர்கள் உண்மையில் யார் என்பதை சிறிலங்காவின் நீதி முறையால் கண்டுகொள்ள முடியவில்லை. இதற்குப் புலனாய்வு அதிகாரிகளின் வேண்டுமென்றே செய்த கவனக்குறைவா? தகுதியின்மையா? உண்மையில் இதுகூட என்றுமே தெரியவராமல் போகக் கூடும். என்றாலும் இந்தச் சம்பவத்தில் நீதி வழங்கத் தவறியதற்கு இலங்கை அரசே பொறுப்பாகும்" என்று ஆசிய மனித உரிமைகள் கழகம் கடந்த செவ்வாய்க்கிழமை விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. இது மட்டுமல்ல குற்றச் செயல்களைக் கண்டறிவதற்குப் புலனாய்வுசெய்யும் தகுதியோ அல்லது இவற்றைத் தடுப்பதற்கான தகுதியோ தற்போது இலங்கையில் இல்லை என்று கூறும் ஆசிய மனித உரிமைகள் கழகம், உண்மையில் இலங்கையில் நீதி இன்று ஆழ்ந்த இடருக்குள்ளாகி இருக்கிறது என்று சொல்கிறது என்று பரமசிவம் சொன்னார்.

கிழக்கில் எந்தக் கொலை நடந்தாலும், கொழும்பில் கொலை நடந்தாலும் உடனே புலிகள்மீது குற்றம் சாட்டும் கொழும்பு ஊடகங்களும் சரி, அரசியல்வாதிகளும் சரி, கருணையே வடிவான புத்தபிரான் போதனைகளைப் பின்பற்றும் ஆன்மீகவாதிகளானாலும்சரி ஏன் எங்கட சங்கரியார் கும்பலுங்கூட பிந்துனுவெவ பிஞ்சுகள்பற்றி வாய்திறக்க மனம் வரவில்லை. ஆனால் ஆசிய மனித உரிமைகள் கழகம் அஞ்சாமல் கண்டனம் தெரிவித்திருக்கிறது என்றேன்.

இப்பொழுது இராணுவ புலனாய்வுப் பிரிவுக் கட்டளை அதிகாரியின் கொலைக்காகக் கவலைப்படுபவர்களும், கண்டனம் தெரிவிப்பவர்களும் அப்பாவித் தமிழ்ச் சிறுவர்களின் படுகொலைகள் பற்றியோ மற்றும் சிவராம், நடேசன் படுகொலைகள் பற்றியோ, அவர்களைக் கொலைசெய்த கொலைகாரர்களைக் கண்டுபிடிக்கத் தவறியது பற்றியோ மூச்சுக்கூடக் காட்டவில்லை. இந்தநிலை நீடிக்கும்வரையிலும் நீதி நிர்வாகத்துறையிலும், புலனாய்வுத் துறையிலும் நீதியும், சமத்துவமும் ஏற்படும் வரையிலும் கொலைகள் நிறுத்தப்படுவது நிச்சயமில்லை என்று சொல்லி நடந்தார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு...

### போக்குவரத்து நெருக்கடி நீங்க!

கொழும்பில் போக்குவரத்து நெருக்கடி அதிகரித்து வருவதை சமாளிப்பதற்கு புதிய புதிய வீதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் மாநாட்டையொட்டி காலி வீதிக்கு சமதையாக டுப்பிளிக்கேசன் வீதி திறக்கப்பட்டது.

ஆனாலும் போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிக்க முடியவில்லை. இப்பொழுது கடற்கரையோரமாக மறைன்ட்றைவ் கடற்கரை வீதி அமைக்கப்பட்டு வருகிறது.

வடக்கே ஏ-9 வீதி கொஞ்சம் அகலமாக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள்ளும் வீதிகள் பல இன்னமும் அகலமாக்கப்படவேண்டும். இவை தவிர புதிய வீதிகள் அமைக்கப்படவேண்டியது அவசியமே. முன்பிருந்த வீதிகள் கூட இப்போது அகலம் குறைந்து ஒடுங்கிவிட்டன.

இந்த நிலையில் வீதிக்கு வீதி மூலைக்கு மூலை இராணுவச் சோதனைச் சாவடிகள் வீதிகளுக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் இராணுவ சோதனைச்சாவடிகள், முகாம்கள் காரணமாக போக்குவரத்துச் செய்யமுடியாமல் தடுக்கப்பட்டிருக்கின்றன.

இவைதவிர வீதிகளில் ரியூட்டரிகளில் படிக்கும் பிள்ளைகளின் சைக்கிள்கள் - வீதியில் மக்களுக்கும் வாகனங்களுக்கும் தடையாக நிறுத்தப்பட்டிருக்கின்றன.

போக்குவரத்துக் கஷ்டங்களை நீக்க அதிகாரிகள் மட்டுமல்ல பொதுமக்களும் ரியூட்டரி நடத்தும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும்.

யாழ்ப்பாணம் ஜோ.கிருஷ்ணபிள்ளை

## யாழ். நூலக எரிப்பு நாள் நினைவாக... பகுதி - 03 - சந்துரு -

# ஜூன் - 01 பண்பாட்டுப் படுகொலையின் நினைவுநாள்

**ஈழநாடு – (13.06.1981), நமது நோக்கு ஆசிரிய தலையங்கம்**

எல்லா நாடுகளிலும் கல் விக்குப் பெருமை அதிகம். ஆனால், எங்கள் பழைய தமிழ் நூல்களில் கல்விக்குக் கொடுக்கப்பட்ட தனிப் பெருமை மிக மிக அதிகம்.

கல்வியில்லாதவர்களை விலங்காகவே வைத்தார்கள் தமிழ் மக்கள். நாற்கால் ஜீவனாகிய மிருகத்துக்கும், மனிதனுக்கும் எத்துணை தூரம். அத்தனை தூரம் உண்டு கல்லாதவருக்கும் கல்வியுள்ளவருக்கும்.

இந்த உண்மையைக் கருத்திற்கொண்டால், இந்த மாதம் முதலாம் திகதி இரவு தீக்கிரையான யாழ்ப்பாண பொதுஜன நூலகம் எத்தகையவரால் தாக்கப்பட்டதென்பது தெளிவாகும். இந்தவித அநாகரிக நிகழ்ச்சி இந்தக்கால வரலாற்றில் இடம்பெறாததொன்றாகும்... உலகில் மிகப்பெரிய மேதாவிகள் கார்ல் மார்க்ஸ், பேரறிஞர் ஷா, சேர் வின்ஸ்டன் சேர்ச்சில் போன்றவர்கள் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் அல்லர். இந்தப் பெரியோர்களுக்குக் கல்வி புகட்டியது லண்டன் பொருட்காட்சி நூல்நிலையம். (British Museum) என்றால் ஒரு நூலகத்தின் பெருமை, வலிமை எத்துணையதென்பதை எடுத்துரைக்க முடியுமா?...

**வீரகேசரி (20.06.1981)**

யாழ்.பொது நூல்நிலையம் எரிக்கப்பட்டதற்கு இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் கண்டனம்.

யாழ்ப்பாணப் பொதுஜன நூல்நிலையம் எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டதையும், யாழ். மத்திய கல்லூரி நூல்நிலையம் உடைக்கப்பட்டு விலை மதிப்புள்ள புத்தகங்கள் களவாடப்பட்டதையும் கண்டித்து, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க மன்னார் மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**தினபதி – 20.06.1981**

யாழ்.நூல்நிலையத்துக்கு பொலிஸாரே தீ வைத்தனர் எனக் காவலாளிகள் கூறினர் - ஆணையாளர்.

யாழ்.விளையாட்டு அரங்கில் தங்கியிருந்த பொலிஸாரே யாழ்.நூல் நிலையத்துக்குத் தீ வைத்தனர். தீயை அணைக்கச் சென்றவர்களையும் அவர்கள் தடுத்தனர் என மாநகராளுமன்றக் காவலாளிகள் எனக்குத் தெரிவித்தனர். யாழ்.மாநகராளுமன்ற ஆணையாளர் கந்தையா சிவஞானம் பொலிஸ் விசாரணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

**ஈழநாடு – 20.06.1981**

பொலிஸார்தான் தீ வைத்தனர். இப்படித் தாம் கருதுவதாக யாழ். மாநகர ஆணையாளர் சாட்சியம்.

... எனக்குக் கிடைத்த தகவலின்படி துரையப்பா விளையாட்டரங்கில் இருந்த பொலிஸார்தான் பொதுஜன நூலகத்துக்குத் தீ வைத்திருக்க வேண்டும் என்று கருதுகின்றேன். பொதுஜன நூலகத்தில் இருந்த புத்தகங்களைவிட கட்டடம், மின்சாரம் ஆகிய சேதங்கள் சுமார் 12 லட்சம் ரூபாவாகும்.

**"மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது"**

**நீலவண்ணன், வரதர் வெளியீடு 1981**

............

ஐயகோ நூலகம் எரிக்கப்பட்டதே!

"பொலிஸ்மா அதிபரும், பிரிகேடியர் வீரதுங்காவும் யாழ்ப்பாணத்தில் இருக்கத்தக்கதாக, ஜூன் முதலாம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் கொடூரமானவையும், வியப்பானவையுமாகும். அதே பொலிஸார் அன்று இரவு யாழ்ப்பாணம் பொதுஜன நூலகத்துக்குத் தீயிட்டனர். ஏறத்தாழ 97 ஆயிரம் பெறுமதி மிக்க நூல்கள் எரிந்து கருகிப் போயின.

உலகில் எங்கிருந்தும் இனிமேல் பெறுவதற்கரிய நூல் கள் பல எரிந்துபோயின... இரண்டாம் உலக மகாயுத்தத் தின்போது பிரித்தானியாவின் மீது குண்டுகளை வீசச் சென்ற விமானப்படை விமானிகளுக்கு ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் மீது குண்டுகளை வீசி அழித்துவிடக்கூடாது என ஹிட்லர் உத்தரவிட்டார். அதே போல ஜேர்மனியின் ஹைடல்பேர்க் பல்கலைக்கழகத்தைத் தவிர்க்கும்படி பிரித்தானியா தனது விமானப்படைக்குப் பணிப்புரை வழங்கியது. அறிவுத் தளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் பகைவர்களுக்குக்கூட இருந்தது.

... அன்று இரவு 10 மணி போல நூலகத்துக்குள் நுழைந்த கொடியவர்கள் காவலாளியைத் துரத்திவிட்டு, நூலகக் கதவைக் கொத்தித்திறந்து, உள்ளே நுழைந்து அட்டூழியங்கள் புரிந்தனர். 97 ஆயிரம் கிடைத்தற்கரிய நூல்களுக்கு பெற்றோல் ஊற்றிக் கொழுத்தி அழித்தனர்.

தளபாடங்கள் யாவும் ஒன்றாகக் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டன.

சுவர்கள் வெப்பத்தால் வெடித்து உதிர்ந்திருந்தன. யன்னல்கள் சிதறிப்போயின. நூலகத்தினுள் சாம்பல் குவியல்களே எஞ்சிக் கிடந்தன...

... நூலகம் கருகிக் காரை பெயர்ந்து கிடக்கின்றது. நூல் நிலையத்தின் விளம்பரப் பலகையில் "நூலகம் அபிவிருத்தியின் அடித்தளம் இலங்கை நூலகச் சங்கம்" என்ற விளம்பரம் எஞ்சி நிற்கின்றது. உண்மையில் அடித்தளம் மாத்திரமே எஞ்சிநிற்கிறது.

புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது என்ற அறிவித்தலும் நூலக வாசலில் இருக்கின்றது. கயவர்கள் நூலகத்தையே புதைத்துவிட்டார்கள்...

... நூல் நிலையம் அழிந்தது - யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்பட்ட பேரிடியாகும்...

(தொடரும்...)

---

# இந்த வார பலன்

## 03-06-2005 - 09-06-2005 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| செவ் ராகு | சந் | சூ, புத, | சுக் |
| யுரே | 05 கா. 9.03 இட - சந்<br>07 மா. 6.51 மிது - சந்<br>08 மா. 4.21 மிது - புத | | சனி |
| | | | |
| நெப் | | | குரு, கேது |

### மேடம்
**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மிகவும் மகிழ்ச்சி



நிலவும். புத்திரர்களால் உதவியும் சந்தோஷமும் உண்டு. பணவருவாய் சிறப்பாக இருக்கும். எதிர்பாராத வருவாய் வந்து சேரும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். இனபந்துகளின் வரவினால் வீடு கலகலப்பாக இருக்கும். திருமணங்கள் உடனேயே கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வரவேற்பு பிரமாதமாக இருக்கும். உதவி ஒத்தாசைகள் கிடைக்கும். அதிகாரிகளின் பாராட்டுகளும் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடியலாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு வேலை வசதிகள் கிட்டும். மாணவர்களுக்கு வெற்றியும், பாராட்டுகளும் உண்டு.

### இடபம்
**(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங் கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)**



இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பவாழ்க்கையில் இடையிடையே சச்சரவுகள் தோன்றும். வருவாயிலும் பார்க்க செலவுகள் அதிகரித்துக் காணப்படும். தொடங்கும் காரியங்கள் தடை தாமதத்திலேயே இருக்கும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. திருமணப் பேச்சுகள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். சக உதவிகள் கிடையாது. பொறுமையைக் கடைப்பிடிப்பது நன்று.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். வீண் செலவுகள் அதிகமாகும். தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை குலையும். பல சிரமங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறையும்

### மிதுனம்
**(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர் புசம் 1,2,3 ஆம் பாதங்கள் )**

மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவியிடையே



அந்நியோன்யம் அதிகரிக்கும். புத்திரர்களால் சந்தோஷமும், உதவியும் கிட்டும் வீடுகளில் சுப நிகழ்வுகள் நடக்கும். மங்கள கருமங்கள் நடைபெற்று மகிழ்ச்சியுடன் காணப்படுவர். உத்தியோகத்தர்களுக்கு அபிலாஷைகள் நிறைவேறும். அதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மிக நன்றாக நடக்கும். வங்கி உதவிகள் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் அதிகமாகும். மாணவர்கள் கல்வி முன்னேற்றம் உயர்ச்சி அடைவார்கள்.

### கடகம்
**(புனர் பசம் 4 ஆம் பாதம், பசம், ஆயிலியம்)**

கடகராசியினருக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும்.



இனபந்துகளின் உறவுகள் அதிகரிக்கும். புத்திரர்களாலும், நண்பர்களாலும் உதவிகள் கிட்டும். மங்கள கருமங்கள் மகிழ்ச்சி தரும். பெரியோர்களின் ஆசிகள் உண்டு. திருமணப் பேச்சுகள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பணிகள் திருப்தி தரும். சக உதவிகள் உண்டு. அதிகாரிகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்று. வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். நகை வியாபாரிகள் கூடிய நன்மை பெறுவர். தொழிலாளர்களுக்கு ஒற்றுமை வளரும். தொழில் வாய்ப்புகள் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் முயற்சிக்கேற்ப வெற்றி கிட்டும்.

### சிங்கம்
**(மகம், பரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

சிங்கராசிக்காரருக்கு குடும்ப



நிலை பொதுவாக நன்று. இனபந்துகளின் உறவுகள் சிறப்பாக இருக்கும். நண்பர்களால் உதவியுண்டு. வெளிநாடுகளிலிருந்து நற்செய்தி கிட்டும். தேகசுகம் சுமாராக இருக்கும். திருமணப் பேச்சுகள் விரைவில் கைகூட வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு தமது பணிகளில் அக்கறை அதிகமாகும். சக உதவிகள் கிட்டும். அதிகாரிகளின் நிலைமைக்கு ஏற்ப நடந்து கொள்ளுதல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் லாபமடைவார். தொழிலாளர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். மாணவர்கள் சுயமுயற்சியுடையவர்கள் பரீட்சைகளில் சித்திபெறுவர்.

### கன்னி
**(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)**

கன்னிராசியினருக்கு குடும்பத்



தில் சதா கருத்துவேற்றுமை இருந்துகொண்டிருக்கும். புத்திரர்களால் உதவி கிடையாது. இனபந்துகளும் தூரவிலகி நிற்பர். தொடங்கும் காரியங்கள் நிறைவேறுவதில் தாமதம் காணும். தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படும். விவாகப் பேச்சுகள் இழுபறி நிலையிலிருக்கும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். கௌரவம் குறையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறையும். கறுப்புச்சந்தை வியாபாரிகளும் நட்டமடைவர். வங்கி உதவிகளும் தேவைக்குக் கிடையாது. தொழிலாளர்கள் ஏற்ற ஒப்பந்தத்தை நிறைவு செய்வதில் கஷ்டமுறுவர். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை செலுத்தவேண்டும்.

### துலாம்
**(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)**


துலாராசிகாரருக்கு குடும்பத்



தில் சிறு சிறு சச்சரவுகள் இடையிடையே தோன்றி மறையும். வருவாயிலும் பார்க்க செலவுகள் அதிகரிக்கும். கருமங்களில் தடைகள், அலைச்சல்கள் காணும். புத்திரர்களால் தொல்லைகள் இல்லாவிடினும் உதவிகள் கிடையாது. தேகசுகம் சுமாராக இருக்கும். திருமணப் பேச்சுகள் தாமதத்தின்மேல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாயினும் சமாளித்துக்கொள்வர். பதவி உயர்வுகள் பின்தள்ளிப் போகும். வர்த்தகர்களுக்கு நிதி நெருக்கடி ஏற்படும். வியாபாரமும் குறைவாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். தொழிலாளர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாவதில் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு சோம்பல் தனத்தால் முன்னேற்றம் குன்றும்.

### விருச்சிகம்
**(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

விருச்சிகராசியிற் பிறந்தவர்



களுக்கு குடும்பத்தில் மன் மகிழ்ச்சியான சம்பவங்கள் நிகழும். புத்திரர்களால் மகிழ்ச்சியும், உதவியும் கிட்டும். குடும்ப வருமானம் திருப்தியாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் வெற்றியாகவே முடியும். மங்கள கருமங்கள் கைகூடி புதுவாழ்வு ஆரம்பிக்கும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு கிட்டும். பதவி உயர்வு கிடைக்க இடமுண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் "ஓகோ" என்று நடக்கும். நிகரலாபம் கிட்டும். தொழிலாளர்களுக்கு ஒப்பந்த வேலைகளில் நல்ல லாபம் கிட்டும் மாணவர்கள் கல்வி முன்னேற்றம் காண்பர். பல்கலைக்கழக அனுமதி கிட்டும்.

### தனுசு
**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

தனுசு இராசியினருக்கு குடும்



பத்தில் நல்லுறவு இருந்தாலும், இடையிடையே சச்சரவுகளும் தோன்றி மறையும். இனபந்துகள் சில சந்தர்ப்பங்களில் தொல்லை கொடுப்பர். பண வருவாயும் செலவும் சமமாக இருக்கும். தேகசுகம் இடையிடையே பாதிக்கக்கூடும். விவாக முயற்சிகள் காலதாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகமாயினும், சக உயர்வுகள் காலதாமதமாகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக இருக்கும். வாடிக்கையாளருக்கேற்ப நடந்தால் லாபமுண்டு. தொழிலாளர் மத்தியில் ஒற்றுமை வேண்டும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், சுயமுயற்சியும் தேவை.

### மகரம்
**(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)**

மகரராசிக்காரருக்கு குடும்பத்



தினரிடையே கருத்து வேறுபாடுகள், சச்சரவுகள் அதிகரிக்கும். வருமானத்துக்கு மிஞ்சிய செலவு ஏற்படும். சிக்கனம் தேவை. கருமங்களில் தடை தாமதங்கள் காட்டும். தேகசுகமும் அடிக்கடி பாதிக்கப்படும். திருமணப் பேச்சுகள் இழுபறி நிலையிலிருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும்.

அதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாகவேண்டியிருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். தொழிலாளர்களுக்குள் ஒற்றுமையீனங்கள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை காட்டும்.

### கும்பம்
**(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )**

கும்பராசியில் பிறந்தவர்களு



க்கு குடும்பத்தில் அமைதி நிலவும். பண வருவாய் திருப்திகரமாக அமையும். புத்திரர்களால் மகிழ்ச்சியும், உதவியும் கிட்டும். இனபந்துகளின் வரவு கூடுதலாக இருக்கும். கருமங்கள் விரைவில் சித்தியாகும். தேகசுகம் ஓரளவு நன்றாகவே இருக்கும். திருமணப் பேச்சுகள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு கடமையில் மனநிறைவு ஏற்படும். செல்வாக்கு உயரும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக இருக்கும்.

ஆபரணங்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு தொழில் வளர்ச்சியடையும்.

வருவாய் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வி விருத்தியடையும். பரீட்சைகளில் சித்தியுண்டு.

### மீனம்
**(பரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)**


மீனராசியினருக்கு குடும்பத்தில்



சந்தோஷம் மிகும். உறவினர், அயலாருடன் ஒற்றுமை அதிகரிக்கும். புத்திரர்களால் சந்தோஷம் உண்டு. கருமங்கள் தடங்கலின்றி நிறைவேறும். தேகசுகம் பாதிப்படையாது. திருமணப் பேச்சுகள் விரைவில் நிறைவுபெறும். உத்தியோகத்தர்களுக்கு மதிப்பு, மரியாதை உயரும். விரும்பியவாறு தொழில் புரியவாய்ப்புகள் கிட்டும். அதிகாரிகளின் அனுசரணையும் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபார நடவடிக்கை நன்றாக அமையும். பழைய முதலீடுகள் விற்பனையாகும்.

தொழிலாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் கிட்டும். மாணவர்கள் மத்தியில் கல்வி சிறப்படையும். உயர்கல்வி கற்க வாய்ப்புண்டு.

# பில் கிளிண்டன் மீது மற்றுமொரு பாலியல் குற்றச்சாட்டு முன்வைப்பு



வொஷிங்டன் அமெரிக்காவில் 2 முறை அதிபராக இருந்தவர் பில் கிளின்டன். இவர் தனது அலுவலக உதவியாளர் மொனிகா லெவன்ஸ்கியுடன் பாலியல் உறவு வைத்திருந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதை உண்மை என்று ஒப்பு கொண்ட கிளின்டன் பகிரங்க மன்னிப்புக் கேட்டார்.

அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு கிளின்டன் தனது சுயசரிதையை எழுதினார். அதில் தனது இளமைக்காலம், மொனிகா லெவன்ஸ்கியுடன் உறவு பற்றி குறிப்பிட்டிருந்தார். இந்தப் புத்தகம் உலகம் முழுவதும் பரபரப்பாக விற்பனையானது.

இந்த நிலையில், கிளின்டன் மீது மற்றொரு பாலியல் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதை அமெரிக்க சட்டத்தரணி ஜாக்சன் என்பவர் தெரிவித்திருக்கிறார். கிளின்டன் எழுதிய 'என்னுடைய வாழ்க்கை' புத்தகத்தில் அந்தரங்க விடயங்களையும் மறைக்காமல் எழுதியிருப்பார் என்று நினைத்தேன். ஆனால், அப்படி செய்யாததால் அவரைப்பற்றி புதிய புத்தகத்தை நான் எழுதவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

பெண்களை குறி வைத்து இயங்கும் கிளின்டன் இயந்திரம் என்று அவர் தனது புத்தகத்திற்குப் பெயர் வைத்துள்ளார். இந்தப் புத்தகத்தில் தாதி ஒருவரை கிளின்டன் வலுக்கட்டாயமாக பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியதாக அவர் தெரிவித்திருக்கிறார்.


கிளின்டன் 1978 ஆம் ஆண்டு அர்கான்சாஸ் மாகாணத்தில் சட்டமா அதிபராக இருந்தார். அப்போது தாதி ஜினித்தா பிராட்ரிக் என்பவரை சந்தித்தார். அவரது அழகில் மயங்கிய கிளின்டன் தன்னுடன் தனியாக தேனீர் அருந்த வரமுடியுமா என்று கேட்டார்.

இதற்கு ஜினித்தா சம்மதம் தெரிவித்தார். அவரை ஹோட்டலுக்கு அழைத்துச்சென்று பலாத்காரமாக வல்லுறவுக்குள்ளாக்கினார். இதுகுறித்து ஜினித்தா என்னிடம் தெரிவித்தார்.

அதன் பிறகு கடந்த 1991 ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் வேட்பாளராக கிளின்டனின் பெயர் அறிவிக்கப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக ஜினித்தா அவரைச் சந்தித்தார். அப்போது கிளின்டன் அவரிடம் மன்னிப்புக் கேட்டார் என்று புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது அமெரிக்காவில் மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.




## கடற்கன்னியின் கால்கள் சத்திரசிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டன



லிமா

தென்அமெரிக்காவில் உள்ள பெரு நாட்டில் லிமா நகரைச் சேர்ந்த 13 மாதச் சிறுமி மிலா சிராஸ் செர்ரான். இந்தக் குழந்தை பிறக்கும்போதே உடலின் கீழ் பாகம் மீன்போல கால்கள் ஒட்டிய நிலையில் இருந்தது. கால்களைப் பிரிப்பதற்கான சத்திரசிகிச்சை லிமா நகரில் நடந்தது.

லிமா வைத்தியசாலையில், டாக்டர் லூயிஸ் ரூபியோ தலைமையில் 11 டாக்டர்கள் கொண்ட குழு 4 மணி நேரம் சத்திரசிகிச்சை செய்து கால்களைப் பிரித்தது. சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்ததாக டாக்டர் லூயிஸ் ரூபியோ கூறினார்.

இந்தச் சத்திரகிச்சை நேரடி ஒளிபரப்பாக தொலைக்காட்சியில் காட்டப்பட்டது.

70 ஆயிரம் குழந்தைகளில் ஒரு குழந்தை கடல் கன்னியாகப் பிறப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

## கலிபோர்னியாவில் பெருமழை, நிலச்சரிவு



அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தின் தெற்குப் பகுதியில் லாகுணா கடற்கரை உள்ளது. இந்த இடம் மலைப்பகுதியான இடமாகும். அங்கு தற்போது கனமழை பெய்து வருகிறது. இதனால் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 18 வீடுகள் இடிந்து தரைமட்டமானதுடன் 20 வீடுகள் சேதமடைந்தன. அப்போது பாடசாலை மற்றும் வேலைக்குச் செல்ல பொதுமக்கள் புறப்பட்டுக் கொண்டிருந்ததால் உயிரிழப்பு ஏற்படவில்லை.

இதற்கிடையே புருபேர்ட் கேன்யான் பகுதியிலும் நிலச்சரிவு ஏற்படும் என்று தெரியவந்தது. அந்தப் பகுதியில் உள்ள 350 வீடுகளில் இருந்து மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். தீயணைப்பு வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# அமெரிக்க ஜனாதிபதி நிக்சனை வீழ்த்திய 30 வருட கால இரகசியம் அம்பலமானது!

சாந்தா ரோஸ்

முன்னாள் அமெரிக்க அதிபர் ரிச்சட் நிக்சன் பதவிவிலகவும், வாட்டர் கேட் ஊழல் வெளிவரவும், காரணமாக இருந்த அமெரிக்கப் புலனாய்வு அதிகாரியின்பெயர் தற்போது வெளிவந்திருக்கிறது. அமெரிக்க அதிபர் ரிச்சட் நிக்சன் பதவி விலகக் காரணமான வாட்டர் கேட் ஊழலை அம்பலப்படுத்தி அவரைப் பதவியிலிருந்து விலக்க தி வொஷிங்டன் போஸ்ட் செய்தி காரணமாக அமைந்தது.

கடந்த 70 ஆம் ஆண்டுகளில் வாட்டர் கேட் ஊழல் உலகம் முழுவதும் பேசப்பட்ட ஒன்று. இந்த ஊழல் புகார் காரணமாக நிக்சன் மீது கண்டனத் தீர்மானம் கொண்டுவந்து சபையில் விசாரிக்கப்பட்டு, அதிபர் பதவியை இழக்க நேரிட்டது. வொஷிங்டன் போஸ்ட் இதழில் இச்செய்தியின் அடிப்படை மூலகர்த்தா டீப் துரோட் என்று மட்டும் வெளியிடப்பட்டது. அதாவது அதிரகசியம் காக்கும் நபர் அல்லது எக்காரணம் கொண்டும் வாயைத் திறக்காதவர் என்று கூறலாம். கடந்த 30 ஆண்டுகளில் இந்தச் சொற்றொடர் புலனாய்வுச் செய்திகளில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த சொல்லாகும். வாட்டர் கேட் என்ற இடத்தில் நடந்த ஊழல் செய்தியைச் சேகரித்தவர் உட்வேர்ட் என்ற நிருபர். அவர் யாராரிடம் இருந்து தகவல் பெற்றார் என்பதே பரம ரகசியம். அதை அப்பத்திரிகை டீப்துரோட் என்று மட்டும் அப்போது குறிப்பிட்டது.

ஆனால், நேற்று முன்தினம் அப்பத்திரிகையின் இணையத்தளத்தில்,

எப்.பி.ஐ. என்ற அமெரிக்க புலனாய்த்துறை (பெடரல் பீரோ ஒப் இன்வெஸ்டிகேஷன்) அதிகாரி டபிள்யூ. மார்க் பெல்ட் என்பவரால்தான் அந்த டீப் துரோட் என்ற ரகசியம் வெளிச்சமாக்கப்பட்டிருக்கிறது. பெல்ட் தன் சட்டத்தரணியிடம் தெரிவித்த தகவல் அந்த இணையத்தள செய்தியில் பதிவாகி இருக்கிறது. அவர் எப்.பி.ஐயில் பணிபுரிந்தபோது, இந்தத் தகவலைக் கூறிய விஷயத்தைத் தன் குடும்பத்தினர் உட்பட எவருக்கும் கடைசிவரை தெரிவிக்கவில்லை. சட்டத்தரணிக்கு தெரிவிக்கும்போதே தன் குடும்பத்தினரிடமும் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இப்போது கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள சாந்தா ரோஸ் என்ற இடத்தில் வசிக்கும் அவருக்கு வயது 91. பக்கவாதம் பாதித்ததால் பலவீனமாக இருக்கிறார். அதனால் நிருபர்களைச் சந்திக்க அவரது குடும்பத்தினர் அனுமதிக்கவில்லை. ஆனால், அவர் பேரன், தன் தாய்நாட்டிற்கு பெரும் அநீதி இழைக்கப்படும் போது, அதை நிவர்த்திசெய்ய எந்தத் தியாகமும் செய்யலாம் என்ற கொள்கை உடையவர் என்று பெருமையுடன் குறிப்பிட்டார். வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் தலைமைப் பொறுப்பில் அப்போது இருந்தவர்களும், டீப்துரோட் என்பது பெல்ட் தான் என்பதை உறுதிப்படுத்தினர்.

# நடிகை விஜயசாந்தி புதியகட்சி அமைக்கிறார்

நகரி

பிரபல நடிகை விஜயசாந்தி கடந்த சில ஆண்டுகளாக ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தெலுங்கானா மாநிலம் ஏற்படுத்த வேண்டும் என்று போராடி வருகிறார். அவரது கோரிக்கைக்கு பாரதீய ஜனதா ஆதரவு தராததால் அக்கட்சியில் இருந்து வெளியேறினார்.

தெலுங்கானா கிடைக்கும்வரை ஓய மாட்டேன் என்று பகிரங்கமாக அறிவித்த அவர் - தனது போராட்டத்தைத் தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளார். இதன்படி அவர் சென்னையில் உள்ள வீட்டை காலி செய்துவிட்டு ஹைதராபாத் சென்றுவிட்டார்.

தெலுங்கானாவுக்காக குரல்கொடுத்து வரும் அவருக்கு ஆந்திராவில் ஆதரவு பெருகியது. அவரது ஆதரவாளர்கள் தெலுங்கான விஜயசாந்தி யுவசேனா என்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர்.

இதுதவிர, தெலுங்கானா பகுதியில் உள்ள பல்வேறு அமைப்புகளும் விஜயசாந்திக்கு ஆதரவு கொடுக்க முன்வந்திருப்பதால், 'தல்லி தெலுங்கானா' என்ற புதிய கட்சியை ஆரம்பிக்க அவர் திட்டமிட்டுள்ளார். (இதற்கு தமிழில் தாய் தெலுங்கானா என்று பெயர்)

புதிய கட்சியின் தொடக்க விழாவை



வாரங்கல் மாவட்டம் ராமண்ணகூடம் கிராமத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி நடத்த முடிவு செய்துள்ளார். இது அவர் பிறந்த ஊர்என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சி தொடக்க விழாவுக்காக ராமண்ணகூடம் கிராமத்தில் 2 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தில் பிரமாண்ட பந்தல் அமைக்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை கட்சிப் பொறுப்பாளர் ராகவேந்தர்ராவ் செய்துவருகிறார்.

தெலுங்கானா தனி மாநிலத்திற்காக போராடும் அமைப்புகளின் தலைவர்களை இக் கூட்டத்திற்கு வருமாறு விஜயசாந்தி அழைப்புவிடுத்துள்ளார்.

# முன்னாள் அழகி ஐஸ்வர்யாராய் 9 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டார்!

லண்டன்



உலகின் சிறந்த 50 அழகிகள் பட்டியலில் பல ருசிகர தகவல்கள் இடம்பெற்றுள்ளன. உலக அழகியாக இருந்த ஐஸ்வர்யாராய் 9 ஆவது இடத்துக்கு பின் தள்ளப்பட்டுள்ளார்.

முன்னாள் உலக அழகியான ஐஸ்வர்யா ராய் பொலிவூட்டின் முன்னணி நட்சத்திரமாக விளங்கி வருகிறார். ஹொலிவுட் படங்களிலும் நடித்து வரும் ஐஸ்வர்யாராய் உலக அழகி பட்டம் வென்று பல ஆண்டுகளுக்கு பிறகும் உலகின் முன்னணி அழகிகளில் ஒருவராக வலம் வந்து கொண்டிருந்தார்.

இந்த முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய் தற்போது 9 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டு விட்டர். என்றாலும் அவருடைய மவுசு இன்னும் குறைந்து விடவில்லை. உலகின் பல முன்னணி நட்சத்திரங்களை விட அவர் முன்வரிசையில் தான் இருந்து வருகிறார். லண்டனைச் சேர்ந்த ஹார்ப்பர்ஸ் அண்ட் குயீன் என்ற நிறுவனம் உலகின் மிகச்சிறந்த 50 அழகிகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் இது போன்ற பல சுவையான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

50 அழகிகளின் பட்டியலில் முதலிடம் பிடித்திருப்பவர் ஏஞ்சலினா ஜாலி அவரை அடுத்து கிறிஸ்டி துர்லிங்டன், ஜோர்தான் ராணியா, சோபியா கப்போவா, நைஜெல்ல லாங்சன், உமா துர்மன், இம்மானுவேல் பட், காத்தே மாஸ் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். இதில் ஐஸ்வர்யாவுக்கு 9 ஆவது இடம்கிடைத்துள்ளது.

இந்தப் பட்டியலில் ஐஸ்வர்யாராய் தவிர மற்றொரு இந்திய மொடல் அழகியும் நடிகையுமான பத்மா லட்சுமியும் இடம்பெற்றுள்ளார். பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டியின் 4 ஆவது மனைவியான பத்மா 28 ஆவது இடத்தில் உள்ளார்.

ஜூலி கிறிஸ்டி 23 ஆவது இடத்திலும், வனீசா ரெட்கிரேவ் 32 ஆவது இடத்திலும், ஹல்லி பெர்ரி 37 ஆவது இடத்திலும் உள்ளனர். நடிகை ஜெனிபர் லோபஸ்ஸுக்கு 39 ஆவது இடம் கிடைத்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# மெய்க்காப்பாளரின்றி முத்தலிப் காரில் பயணம் செய்தது ஏன்?

## விசாரணை ஆரம்பித்திருப்பதாக இராணுவப் பேச்சாளர்

கொழும்பு.........

தனது வாகனத்தில் மட்டும் பயணம் செய்யாமல் அடிக்கடி வாகனங்களை மாற்றிப் பயன்படுத்திவந்த லெப். கேணல் முத்தலிப், மெய்க்காவலர்கள் இல்லாமல் தனித்துப் பயணம் செய்தது ஏன் என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக பொலிஸ், இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

லெப். கேணல் துவான் நிஸாம் முத்தலிப் வழமையாக தனது பாதுகாப்புப் படையினர் சகிதம் பயணம் மேற்கொண்டாலும் சில நாட்கள் பாதுகாப்பு வீரர்கள் இன்றியும் பயணம் செய்து வந்துள்ளார்.

அத்துடன், அவர் தனது வாகனத்திலேயே தினமும் பயணத்தை மேற்கொள்ளாது அடிக்கடி வெவ்வேறு வாகனங்களில் பயணம் செய்துள்ளார்.

சம்பவ தினத்தன்று முத்தலிப் பாதுகாப்புப் படையினர் எவருமின்றி தனியே பயணத்தை மேற்கொள்ளப்போவது குறித்து துப்பாக்கிதாரிகள் ஏற்கனவே அறிந்திருந்தனரா என்பது பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை முத்தலிப்பைக் கொலைசெய்ய மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகளைக் கண்டுபிடிப்பதற்காக 150 இரகசிய பொலிஸாரடங்கிய 5 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக இரகசிய பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தவிர துப்பாக்கிதாரிகள் பற்றிய தகவல்களை அறிய அனைத்து இரகசிய பொலிஸாரையும் உள்ளடக்கிய வகையிலான இரகசிய நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட இருவரின் உருவத்தோற்றம் பற்றிய தகவல்களை சேகரிக்கப்பட்டு, நாடு முழுவதும் இருக்கும் பொலிஸ் மற்றும் இராணுவ சோதனைச் சாவடிகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

இவ்விருவர் பற்றியும் கிடைக்கப் பெற்றிருக்கும் தகவல்களுக்கு அமைய அவர்களின் உருவத்தை வரைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சம்பவ தினத்திற்கு முந்தினமும் லெப். கேணல் முத்தலிப் பாதுகாப்பு வீரர்கள் இன்றியே கொத்தலாவெல பயிற்சிக் கல்லூரிக்கு பயணம் செய்திருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன என இரகசிய பொலிஸார் தெரிவித்தனர்.

லெப். கேணல் முத்தலிப்பிற்கு போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததாகவும், எனினும் சம்பவ தினம் பாதுகாப்புப் படையினர் இன்றி பயணம் மேற்கொண்டது பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

# ஒளிபரப்பு நிலையம் மீது வவுனியாவில் கிரனேட் வீச்சு!

வவுனியா..........

வவுனியாவில் றெலோ இயக்கத்தினால் நடத்தப்பட்டுவரும் சன் தொலைக்காட்சி மீள் ஒளிபரப்பு நிலையம் மீது நேற்று அதிகாலை 1.45 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

வவுனியாவின் வைரவப் புளியங்குளத்தில் இந்தத் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் அமைந்துள்ளது. இந்தத் தாக்குதலில் 10 லட்சம் ரூபா மதிப்புள்ள சாதனங்கள் சேதமடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்றுபேர் கொண்ட குழுவினர் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றதாக சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முத்தலிப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விடுமுறை வழங்கப்படவில்லையாம்!

## இராணுவத் தரப்பு மறுப்பு

இராணுவப் புலனாய்வுப் பிரிவு சிரேஷ்ட அதிகாரி லெப். கேணல் நிசாம் முத்தலிப் படுகொலை செய்யப்பட்ட தினத்தன்று அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்ததான குற்றச்சாட்டை படைத்தரப்பு நிராகரித்துள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் தளபதியான லெப்.கேணல் முத்தலிப்பிற்கு ஒரு போதும் பாதுகாப்பு வழங்காமல் விடப்படவில்லை. இவருடைய பாதுகாப்புத் தொடர்பாக அண்மையில் இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட பரீட்சித்திருந்தார்.

லெப். கேணல் துவான் நிசாம் முத்தலிப்புடைய பாதுகாப்பில் எவரும் தலையிட முடியாது.

எனினும், அன்றையதினம் அவருக்கு வழமையாக வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர் பயன்படுத்தாமல் விட்டது துரதிஷ்டமானது என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை லெப். கேணல் முத்தலிப்பை படுகொலை செய்தது விடுதலைப்புலிகளே என இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் முன்னாள் பணிப்பாளர் பிரிகேடியர் எச்.கே.ஜீ ஹெந்த விதாரண தெரிவித்துள்ளார்.

ஆழ ஊடுருவித் தாக்கும் படையணிக்குலெப். கேணல் முத்தலிப் தலைமைதாங்கியிருந்ததாக வெளியான செய்திகள் தவறானவை.

எனினும் விடுதலைப் புலிகளுக்கெதிரான பலதாக்குதல்களுக்கு தலைமை தாங்கியிருந்தாரென அவர் மேலும் குறிப்பிட்டார்.

### இந்திய...

குறித்து விரிவான பேச்சுக்களை நடத்தினார். எனினும், இந்தப் பேச்சுக்களின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா தனது இந்திய விஜயத்தின்போது சோனியா காந்தி மற்றும் மணிசங்கர ஐயர் உள்ளிட்டோரையும் சந்திக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது. (01)

# சந்திப்பு ஒத்திவைப்பு

விடுதலைப் புலிகளுடன் இலங்கைக்கு உதவி வழங்கும் நான்கு முக்கிய சர்வதேச நிறுவனங்கள் இன்று நடத்தவிருந்த ஆலோசனைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நிதியம் மற்றும் ஜப்பானிய வங்கி ஆகியவை தமிழர் தாயக மறுசீரமைப்புப் பணிகள் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் ஆலோசனை நடத்த திட்டமிட்டிருந்தனர்.

இந்த சந்திப்பு கிளிநொச்சியில் இன்று நடைபெறவிருந்தது. தற்போது இந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### பொதுக்கட்ட....

இருந்து ஜே.வி.பி வெளியேறும் பட்சத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்று அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்வதற்கான பொறுப்பை பிரதியமைச்சர் டிலான் பெரேரா ஏற்றுள்ளார்.

பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுமாக இருந்தால், அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி. வெளியேறுவது தவிர்க்க முடியாததெனவும், இதன் மூலம் அரசியல் நெருக்கடி ஒன்று ஏற்பட்டு புதிய தீர்வொன்று கிடைக்குமெனவும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கில்...

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள், கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ் அமைப்புகளின் பிரிதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்ட கூட்டத்திலேயே, இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க முடிவு எடுக்கப்பட்டது.

திருகோணமல்லயில் மேலதிகமாக குவிக்கப்பட்ட இராணுவத்தினரை நேற்றுக்காலை வெளியேற்றுவதாக அரசதரப்பினர் உறுதியளித்தபோதும் இராணுவத்தினர் வெளியேற்றப்படவில்லை. இதனை கூட்டத்தில் கலந்து கொண்டோர் கண்டித்தனர். அரசு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியதற்காக இன்று வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

புத்தர் சிலையை திருகோணமலை நகரசபைக்குச் சொந்தமான காணியில் இருந்து அகற்றுவதற்கு அரசதரப்பு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை கால அவகாசம் கேட்டுள்ளது. இதற்குள் புத்தர் சிலை அகற்றப்படாவிடின் மீண்டும் 16 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொது மக்களும் முடிவொன்றை எடுப்பதாகவும் மேற்படி கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன், கனகரட்ணம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், ஜோசப் பரராசசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# புலனாய்வுப் பிரிவின்...

கொலையாளிகள் எவரும் கைது செய்யப்படவுமில்லை; அவர்கள் பயன்படுத்தியதான ஆயு தங்கள் கைப்பற்றப்படவுமில்லை.

எமது பாதுகாப்புக் குறித்தும், உளவுத்துறை குறித்தும், மன்னிக்கமுடியாத மற்றும் அவமானகரமான உண்மைகளையே இது வெளிப்படுத்துகிறது. இத்தகைய ஒரு அமைப்பை வைத்துக்கொண்டு 20 ஆண்டுகால யுத்தம் நடத்தியிருப்பது எண்ணிப் பார்க்க முடியாததாக இருக்கிறது. விசேடமான வாகனங்கள், பொலிஸின் அவசரப் பிரிவினர், நவீன தகவல் தொடர்பு அமைப்புக்கள் என எல்லாம் இருக்கின்றன. ஆனால் அவற்றால் எதுவித பயனுமில்லை.

அனைவரும் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டுச் சொல்கின்றனர் - கொழும்பில் விடுதலைப் புலிகளின் உளவு அமைப்பு பலமாக இருக்கிறது என்று. இது எவ்வளவு அபாயகரமானது?

ஒரு புலனாய்வுத்துறைத் தலைவரின் நகர்வுகள் குறித்து தகவல்களை யார் அளித்தது? மிலேனியம் சிற்றி நடவடிக்கைகள், பொதுவான குற்றவாளிகளின் நடவடிக்கை போல் அம்பலமாகிவிட்டது. அதனால்தான் எதிரிகளுக்கு தகவல்கள் மற்றும் நடவடிக்கைகள் நேரடியாகச் சென்றடைகின்றன என்று அப் பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழீழ மாணவர் எழுச்சி...

தேசியக் கொடியினை யாழ். மாவட்ட மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து பொன்.சிவகுமாரனின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை யாழ். கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வன் ஏற்றிவைத்தார். மலர் மாலையினை வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இன்பன் அணிவித்தார். மேஜர் முரளியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை தீவகக் கோட்ட சிறப்பு அரசியற்துறைப் பொறுப்பாளர் சுரேன் ஏற்றிவைத்தார். மலர் மாலையினை சங்கானைக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் குணேந்திரனால் 2005ஆம் ஆண்டு மாணவர் பிரகடனம் வாசிக்கப்பட்டது. இந்த நிகழ்வைத் தொடர்ந்து சிறப்புரைகளை தேசிய எழுச்சி பேரவையின் ஊடகப் பேச்சாளர் கனகலிங்கம், தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் பஞ்சலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதேவேளை,

கிளிநொச்சியில் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் மிகுந்த எழுச்சியுடன் நேற்று நடைபெற்றன.

முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மத்திய மைதானத்திலிருந்து விடுதலைப் போராட்டத்தில் முதல் மாவீரரான பொன் சிவகுமாரன் மற்றும் மாவீரரான முன்னாள் யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மேஜர் முரளி ஆகியோரின் உருவப்படத்துடன் மாணவர்கள் தாங்கிய தொடங்கிய பேரணி - பிரதான வீதி வழியாக நகர்ந்து சந்திரன் பூங்காவை சென்றடைந்தது.

அங்கு கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் அரங்க நிகழ்வுகளும், எழுச்சி உரைகளும் இடம்பெற்றன..

# யுத்த நிறுத்தத்தை தொடர...

வெளிப்படுத்தியதாக அவர் கூறினார்.

சுனாமி மீளமைப்பு, போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுசீரமைப்புப் பணிகள் மற்றும் அமைதிப் பேச்சுக்கள் ஆகியவற்றில் சுவிஸ் அரசு முழு ஒத்துழைப்பை அளிக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

சுனாமி மீளமைப்புக்காக சுவிஸ் மக்கள் தன்னெழுச்சியாக அளித்த பேருதவிகளைப் பாராட்டிய சு.ப. தமிழ்ச்செல்வன்- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பேணுவதில் இலங்கை அரசுக்குத்தான் தார்மீகப் பொறுப்புண்டு என்பதை அண்மைய நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி விளக்கினார்.

திருமலை மற்றும் வவுனியா ஓமந்தை புத்தர் சிலை விவகாரங்கள் மூலம் பேரினவாத சக்திகள் உருவாக்கிவரும் பதற்றச் சூழல், ஆயுதக் குழுக்களை இராணுவமே உருவாக்கி பாதுகாத்து வருவது மற்றும் தமிழ் மக்கள் மீதான இராணுவ நெருக்குவாரங்கள் ஆகியவற்றை விபரித்த தமிழ்ச்செல்வன், இத்தகைய நடவடிக்கைகளால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீது தமிழ் மக்கள் முழு அளவிலான நம்பிக்கையின்மை கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துகளை முழுமையாகச் செயற்படுத்தி இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது என்றும் தமிழ்ச் செல்வன் கூறினார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதிலும், பொதுக்கட்டமைப்பு போன்ற விடயங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் எத்தகைய நெகிழ்வுத் தன்மைகளோடு இயங்கி வருகிறார்கள் என்பதையும் சுவிஸ் தூதுவருக்கு தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

இந்தச் சந்திப்பின்போது சுவிஸ் வெளியுறவு அமைச்சுச் செயலாளர் ஸ்டெர்சிங்கெர் உடனிருந்தார்.

சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

# மரண அறிவித்தல்

## திருமதி ஏகாம்பரம் அன்னப்பிள்ளை (மணி)

நெடுந்தீவு மேற்கு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொட்டடி வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஏகாம்பரம் அன்னப்பிள்ளை (மணி) அவர்கள் (01-06-2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதன் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், ஐயம்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், ஏகாம்பரத்தின் அன்பு மனைவியும், சின்னத்தங்கம், காலஞ் சென்றவர்களான மருதையினார், பத்தினிப்பிள்ளை, பொன்னம்மா, தையல்நாயகி, சின்னச்சித்தி, கோமளம் ஆகியோரின் சகோதரியும், பசுபதி, அன்னம்மா, கிருஷ்ணபிள்ளை, தனுக்கோடி, சோமலிங்கம், தனுக்கோடி, அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, மார்க்கண்டு ஆகியோரின் மைத்துனியும், விஸ்வலிங்கம், பத்மராணி, பத்மராசா ஆகியோாரின் தாயாரும், நந்தகுமார் (யாழ்.போதனா வைத்தியசாலை) மாமியாரும், தசாகனின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியை 03-06-2005 (வெள்ளிக்கிழமை) பி.ப. 1.30 மணிக்கு இல.246, வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி, காரைநகர் வீதி, கொட்டடி என்னும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*லிங்கம் களஞ்சியம்,*
*அன் கொமினிக்கேசன்,*
*காரைநகர் வீதி, கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.* (1181)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.